சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல் —"குறள்"

தென்றல்

ஆசிரியர் : கண்ணதாசன்

"போற்றுபவர் போற்றட்டும்;
—புழுதிவாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்;
தொடர்ந்து சொல்வேன்!
ஏற்றதொரு கருத்தை என(து)
உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும்
நில்லேன்; அஞ்சேன்!"

உள் நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணு. வெளி நாடு : மூன்றணு.

மலர் 1 | சென்னை | 28—8—1954 | சனிக்கிழமை | இதழ் 10

தமிழினத்தின் உடன் பிறந்தார் அவர்களன்றோ?

கடந்த ஞாயிறன்று காஞ்சிமா நகரில் நடைபெற்ற செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழக இரண்டாவது அரசியல் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானங்களைக் காணும்போது நமது இயக்கம் எவ்வளவு மகத்தான பணிகளையும் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டிருக்கிறது என்பது தெளிவாகிறது. இயக்கத்தின் வளர்ச்சியைக் கண்டு பீதியடைந்திருப்போர் நாட்டின் நாலு பகுதிகளிலும் நம்மீது கண்டனக் கணைகளைத் தொடுத்து வரும் இதே நேரத்தில், நமது இயக்கம் நாட்டு மக்களை பாதிக்கக் கூடிய சகல பிரச்னைகளிலும் மிகத் தீவிர கவனம் செலுத்தி வருகிறது. சுருங்கச் சொன்னுல் நமது இயக்கம் தேசீய இயக்கமாக மலர்கிறது! இயக்கத்தின் வழி காட்டுதலை நாடு எதிர்பார்க்கிறது.

காஞ்சி மாநாடு நிறைவேற்றியுள்ள தீர்மானங்களில் குறிப்பிடத் தகுந்தவை மூன்று.. அவை இலங்கைத் தமிழர்பிரச்னை, திரு-தமிழர் பிரச்னை, புதுச்சேரி, காரைக்கால் போன்ற பிரஞ்சிந்தியப் பிரச்னை ஆகும்.

இலங்கைத் தமிழர் பிரச்னையில் நேரு அரசாங்கம் காட்டி வரும் ஓரவஞ்சனையை அம்மாநாடு மிக வன்மையாகக் கண்டித்துள்ளது. இலங்கைத் தமிழர் நிலையை நினைத்தாலே நமது உள்ளம் வெடிக்கும் போலிருக்கிறது. இலங்கை ஆட்சியாளர் இந்தியர்களை—குறிப்பாகத் தமிழர்களை நாட்டைவிட்டு வெளியேற்ற திட்டமிட்டுவிட்ட இந்நேரத்தில் நேரு ஆட்சி தமிழ் மக்களுக்கு எவ்வித பாதுகாப்பும் தருவதாகக் கூறவில்லை. பிறந்த பொன்னுட்டைச் சேர்ந்தாவது உயிர் வாழலாம் என்று கருதியுள்ள அவர்களைப் பார்த்து "நீங்கள் இந்தியப் பிரஜைகளுமல்ல" என்று கூறுகிறது.

இந்திய சர்க்கார் இப்படிக் கூறுவதில் காரணம் இல்லாமலும் இல்லை. திராவிட நாடு பிரச்னை இந்திய சர்க்காருக்கு ஒரு தலைவலி பிரச்னையாக வளர்ந்து வருவதை நேரு கவனித்து வருகிறுர். "திராவிடத்தில் வடவருக்கு என்ன வேலை?" என்று திராவிடர் இயக்கம் கேட்கிறதல்லவா? எனவே, திராவிடர் இயக்கப் பிரச்சாரத்தின் விளைவாகத்தான் இலங்கை ஆட்சியினர் தமிழரை நாடுகடத்த முடிவு

சதிகார வடவர் அதை அறிவதேது?

செய்து விட்டதாக பழிசுமத்தலாம் என்று அவர்கள் மனப்பால் குடிக்கின்றுர்கள்; சொல்லாமலும் சொல்கின்றுர்கள். சென்னை தேசிய தினசரியொன்று அப்படி பழி சுமத்தியும் இருக்கின்றது.

நமது இயக்கம் திராவிட நாட்டின் எல்லைக்குள் எந்த அந்நிய சுரண்டலும் இருக்கக் கூடாதென்று தான் கூறுகிறது. நாம் வட நாட்டவரை மட்டுமே கண்டிப்பதாகக் கூறுவோர் கருத்துக் குருடர்களாவர். நாடு கடந்து சென்ற தமிழன் எந்த நாட்டிலும் உழைக்காமல் உண்ணவில்லை; எவரையும் வஞ்சித்து வாழவில்லை. தமிழகத்தில் வாழும் மார்வாரிகளும் குஜராத்திகளும் உழைத்து உயிர் வாழ்பவர் அல்ல. மக்களை வஞ்சித்து வாழ்கிருர்கள். நாட்டின் பொருளாதாரம் அவர்கள் காலடியில் கிடக்கிறது—அந்நிய மூலதனத்தின் கூட்டுறவோடு அவர்கள் நாட்டைச் சூறையாடுகிருர்கள்,

எனவே இலங்கைத் தமிழர் பிரச்னையை வட இந்தியர் பிரச்னையோடு ஒப்பிடுவது மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போடும் முட்டாள்தனமான வாதமேயாகும். இப்படி வாதாடுவோர் ஒரு விஷயத்தை மறந்தே போனுர்கள். அதாவது, இலங்கை வாழ் தமிழரை வெளியேற்றும் முயற்சி இன்று துவக்கப்பட்டதல்ல. 1939ம் ஆண்டில் கூட இப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்பட்டது. அந்த நேரத்தில் இதே நேரு காங்கிரசின் பிரதிநிதியாக இலங்கை சென்றுர். அவர் இலங்கை சென்றபோது இலங்கை இந்தியர்கள் நேருவிடம் கொடுத்துள்ள மகஜர்கள் அனைத்திலும் வெளியேற்றும் முயற்சிக்கு உடனடியாகத் தீர்வு காண கோரியிருந்தனர்.

அந்த நேரத்தில் நேரு பேசிய பேச்சுக்களை மீண்டும் காங்கிரஸ்காரர்கள் படித்துப் பார்க்க வேண்டும். "இந்தியர்களை அவமதிக்கத் தகுந்த எந்த நடவடிக்கையானுலும் இனி அனுமதிக்க முடியாது" என்று நேரு கர்ஜனை புரிந்தார். இது நடந்தது 1939ல். திராவிடர் இயக்கம் தோன்றியது 1944ல். சரித்திரத்தைப் புரிந்துகொள்ளாமல் பேசுவோர் ஏமாளிகள், ஆனுல் நேரு ஏமாளியாக இருக்க முடியாதே!

ஆம்! சமதர்ம வீரர் எத்தராக மாறுகிறுர்! நேரு சமதர்மம் பேசி மக்களை மயக்கிய காலம் மலையேறி விட்டது. இன்று சர்வ தேசீயம் சமாதானம் என்றெல்லாம் பேசி நாட்டு மக்களை மயக்குகிறுர். இனி பலிக்காது—நாம் விழிப்புடனிருக்கின்றோம்.

சமதர்மத்தையும் சர்வ தேசீயத்தையும் சமாதானத்தையும் நேருவிடம் கற்றுக்கொள்ளும் அளவுக்கு தமிழன் தாழ்ந்தவனல்ல. ஏமாந்த காலத்தில் ஏற்றங் கொண்டோர் புலிவேஷம் போடவேண்டாம். உலக அரங்கில் நேருவுக்குக் கிடைத்துள்ள அந்தஸ்து கண்டு உண்மையில் நமக்கு பொச்சரிப்பும் இல்லை, பூரிப்பும் இல்லை. தமிழன் இன்று உரிமையோடு வாழ்ந்து கொண்டிருப்பானேயானுல் உலகமனைத்திற்கும் சமாதான வழிகாட்டியாக, சிறந்த நடுநிலையாளனுகத் திகழ்வான் என்பதில் ஐயமில்லை.

நாம் எல்லைப்பிச்னையில் கவனம் செலுத்தி வந்த நேரத்தில், நம் இயக்கத்திற்கு நேரு சர்க்கார் சவால் விடுத்திருக்கிறது. இலங்கைத் தமிழரை நாடற்ற நாடோடிகளைப் போல நடுவீதியில் நிற்கவைத்து வேடிக்கைப் பார்ப்பது இந்திய சர்க்காருக்கு அழகல்ல. சகல துறைகளிலும் தமிழ் மக்களை நாயினும் கேடாக நடத்தி வந்தது போதும். நேரு சர்க்காருக்கு மனுப்போடவோ, கெஞ்சிக் கேட்கவோ இனி நமது இயக்கம் தயாரில்லை. "நாமார்க்கும் குடியல்லோம்–விடுதலை எமது பிறப்புரிமை" என்று நமது இயக்கம் முரசறைகிறது. நம்மை இழித்துக் கூறுவோர் எவராயினும் அவர்களது ஆதிக்கத்தை அழித்தொழிப்போம். ஆம், இது உறுதி! உறுதி!! உறுதி!!!

அடுத்த இதழ், மலராக

செப். 11ல யன்று வெளிவரும்!

அந்த இதழ் முதல் 'தென்றல்' புதிய உருவங் கொள்ளும். தென்றலுக்கு சொந்த அச்சகம் வாய்த்திருக்கிறது.

எண்ணம்

கண்ணதாசன்

2

ஒரு நாட்டினுடைய கொள்கையை அப்படியே முழுக்க முழுக்க எடுத்துக்கொண்டு வேறொரு நாடு அதைச் செயல்படுத்த முடியாது என்றேன். நாட்டின் நலம் நாடும் எந்தக் கட்சியாளரும் அந்த முடிவுக்குத் தான் வரமுடியும். ஆனால் 'இந்திய' கம்யூனிஸ்ட் கட்சி மட்டும் அந்த முடிவுக்கு வராது. ஏன்; வேறு நாட்டின் பிரசார ஸ்தாபனமாகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட எந்தக் கட்சியின் நிலைமையும் இதுதான். 'அங்கே' என்ன நடக்கிறது என்பதைப் பொறுத்துத்தான் இங்கே என்ன நடக்க வேண்டும் என்பதை அவர்கள் தீர்மானிப்பார்கள்.

* * *

தென்னாட்டின் சூழ்நிலை, இன அடிப்படையில் பிரிந்து வாழ்ந்தால்தான், நாடு சுகப்படும் என்றிருக்கும். ஆனால் இன அடிப்படையை லெனின் அல்லது ஸ்டாலின் ஒத்துக்கொண்டிருக்க மாட்டார்கள். அதற்காக கம்யூனிஸ்ட் கட்சி அதை எதிர்க்கும். பச்சையாக, "லெனின் சொல்லவில்லையே!" என்றும் கேட்கும். "சரி, லெனின் என்னதான் சொன்னார்?" 'உலகமெல்லாம் ஒன்றுபட்டு பாட்டாளி ராச்சியமாக வேண்டும்' என்றார். "அப்படியா! அது இந்த யுகத்தில் நடக்காது போலிருக்கிறதே!" "நடக்காவிட்டால் என்ன! லெனின் மறுத்ததை நாம் செய்யலாமா?" இப்படித்தான் போகும் விவாதம். பிரத்தியட்ச நிலைமையை வைத்துக் கொண்டு, நல்லதொரு கொள்கையைக் கணித்துக்கொள்ள அவர்களால் முடியாது. அப்படி முடிந்து விட்டால், ரஷ்யாவின் நேரடித் தொடர்பு அறுபட்டுப் போகும். அவர்களுக்கிருக்கிற சங்கடம் இதுதான். ரஷ்யாவின் பார்வையிலும் நிழலிலும்தான் அவர்கள் வளரவேண்டியவர்களாயிருக்கிறார்கள். அதனால் தன் வீட்டுச் சாப்பாட்டுக்கு என்ன காய்கறி வாங்குவது என்பதைக்கூடத் தாங்களே நிர்ணயித்துக் கொள்ள முடியாதவர்களாயிருக்கிறார்கள்.

வெறும் பொருளாதார சீர்திருத்தம் ரஷ்யாவின் திசையை மாற்றி நல்வாழ்வு தந்திருக்கலாம். அது ரஷ்யாவில் இருந்த சூழ்நிலைக்கேற்ப சுலபமாக மாற்றப்பட்டிருக்கலாம். உண்மையும் அதுதான். அங்கே முதலாளி, கொழுத்த முதலாளியாகவும், ஏழை பரம ஏழையாகவும் இருந்தான். மேடு—பள்ளம்—இதுமட்டும்தான் நிலைமை. அதனால் மட்டும்தான் மக்கள் அவதிப்பட்டார்கள். நிரந்தரமானதொரு மனமுடக்கம், அந்த மடமையின் காரணமாகப் பொருளாதார பலவீனம் என்பதல்ல ரஷ்யாவின் நிலை. பணக்காரன் ஏழையை பலமாகச் சுரண்டினான்—அவ்வளவுதான். சுரண்டல் பெரும் பகுதி ஒரே ஒரு திசையில் மட்டும்தான். ஆகவே, "அவதிப்படும் பாட்டாளி மகனே!" என்று அறைகூவி அழைத்தது ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சி. நேரடியாகவும், கண்ணுக்கெதிரேயும், தன் விருப்பமில்லாமல் பொருளைக் கொடுத்துவிட்டு ஏங்கிக் கொண்டிருந்த ஏழை, குரலுக்குக் காது கொடுத்தான் கூப்பிட்டதும் ஓடிவந்தான்; புரட்சி செய்தான்; வென்றான். (அதன் பிறகு என்ன ஆனான் என்பது நமக்கு வேண்டாம்.)

இங்கே அப்படியல்ல நிலைமை. பணக்காரன் பகிரங்கமாக, பலாத்காரமாக ஏழையைச் சுரண்டுவது இந்த நாட்டில் சொற்பமே! உண்மையில் ஏழை, தான் சுரண்டப்படுவதை அறியாமலே சுரண்டப்படுகிறான். அந்தச் சுரண்டலுக்குத் தன்னையறியாமல் பரிபூரணமாக ஒத்துழைக்கிறான். சுரண்டலை 'கைங்கரியம்' என்று கருதுகிறான். இங்கே கொழுத்த பணக்காரர்கள் மிகவும் குறைவு. பரம தரித்திரர்கள்—பழைய ரஷ்ய நிலைமையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது — குறைவுதான். இங்கே நடுத்தர வர்க்கம்தான் அதிகம்—அன்றாடம் ஒரு வேளையாவது நிம்மதியாக உண்ணக்கூடியவர்களையும் சேர்த்துத்தான் சொல்கிறேன்—இந்த நடுத்தர வர்க்கத்தாருக்கு சாப்பாடு கிடைத்து விடுகிறது. ஆகவே அந்த சாப்பாட்டைக் காப்பாற்றிக் கொண்டால் போதும் என்று நினைக்கிறார்கள். மற்ற வசதிகளைப்பற்றிச் சிந்தித்துக் கிளர்ச்சி செய்தால் சாப்பாடும் போய் விடுமோ என்று பயப்படுகிறார்கள். "கர்ம பலன். ஆண்டவன் விட்டது அவ்வளவுதான்" என்று நினைக்கிறார்கள். (அந்த மடமை எண்ணத்தைப் பலப்படுத்துவதற்கென்றே ஒரு கூட்டமும் இந்த நாட்டில் இருக்கிறது. அது அதிகமான பிரச்சார பலமும் பெற்றிருக்கிறது.) இவர்கள் உத்தியோகம் உயருமா என்று சோசியனிடம் கேட்பார்கள்; தட்சணை வைப்பார்கள், கோயிலைச் சுற்றி வருவார்கள்—இதைத் தவிரக் கட்டுப்பாடாகக் கிளர்ச்சி செய்ய வரமாட்டார்கள். அப்படிக் கிளர்ச்சி செய்வதானாலும் எந்த முதலாளித்துவத்தை எதிர்த்துச் செய்வது என்பது பிரச்சினை ஆகிவிடும். இந்த நடுத்தர வர்க்கம் பல தொழிலிற் பிரிந்து கிடக்கிறது. இதில் உள்ள எல்லோரது பிரச்சினையும் ஒரே மாதிரியானதல்ல. குடியிருக்க வீடில்லாதவர்கள் சிலர்; வீட்டுக்கு விளக்கில்லாதவர்கள் சிலர்; மனைவிக்கு மாற்று உடையில்லாதவர்கள் சிலர்; தாலிக்சரட்டில் தங்கம் இல்லாதவர்கள் சிலர். இப்படிப் பலவகை. வீடில்லாதவன் வீடு வேண்டுமென்று கிளர்ச்சி செய்தால், வீடிருப்பவன் வரமாட்டான். விளக்கில்லாதவன் விளக்கு வேண்டுமென்று கிளர்ச்சி செய்தால் விளக்கிருப்பவன் வரமாட்டான். ஆகவே இவர்கள் அத்தனை பேரையும் கொண்டு, 'முதலாளித்துவ'த்தை எதிர்த்துப் புரட்சி செய்ய முடியாது. காரணம், இங்கிருப்பது கண்ணுக்குத் தெரியாத முதலாளித்துவம். அது ஒரு உருவத்தில் இல்லை; பல உருவத்தில் இருக்கிறது. பல திசையில் ஏழையின் உழைப்பு பங்கிட்டுக்கொள்ளப்படுகிறது. எப்படிப் போகிறது என்று அவனுக்குத் தெரியாமலே ஏழையின் வாழ்வு பறிபோகிறது.

* * *

நிலப்பிரபு—தொழிலாளி; மில் முதலாளி—தொழிலாளி என்கிற கூறுகள் தென்னாட்டில் குறைவு. அந்தத் தொழிலாளியிடம் போய் வேண்டுமானால், "அகோ! ஏழை மகனே! முதலாளி உன்னைச் சுரண்டுகிறான்" என்று கூறலாம், அவனும் கேட்பான். ஆனால் அந்த தொழிலாளிகளே 'இந்த நாடு முழுதும் நிறைந்திருக்கவில்லை. இந்த இக்கட்டான சூழ்நிலையை ஒருமுகப்படுத்தி ஒன்றுபட்ட நிலைமைக்குக் கொண்டுவந்து கிளர்ச்சி செய்து, ஒரு நல்ல சோஷலிச நாடாகத் தென்னாட்டை ஆக்குவதற்கு ரஷ்யாவின் பொருளாதாரப் பல்லவி மட்டும் பயன் படாது என்பதற்காகவே இவற்றைக் குறிப்பிட்டேன்.

* * *

அடிப்படையில், இந்த நாட்டு மக்களுக்கு, பொருள் முடக்கத்தைக் காட்டிலும் மன முடக்கமே அதிகம்; மடமையே நிறைவு. அதிலிருந்து அவர்களை விடுவிக்க இந்த மடத்தனமான சமுதாய அமைப்பைத் தகர்த்துத் தூளாக்க வேண்டும்—ஒன்று.

இந்தநாட்டு முதலாளியும், அரசாங்கமும் இந்த நாட்டு மக்களைச் சுரண்டுவதைக் காட்டிலும், வடநாட்டு 'வெறியர்'களும் அரசாங்கமும் பகிரங்கமாகவும் மறைமுகமாகவும் சுரண்டுவதுதான் அதிகம். இதைத் தடுக்க சென்னையில் அரிவாளைத் தூக்கிக்கொண்டு புரட்சி செய்ய முடியாது. வடவனைத் தடுத்து நிறுத்தி, "தொடாதே! இது என் வீட்டுச் சொத்து!" என்று கூறநாட்டுப் பிரிவினை முயற்சியில் தீவிரமாக ஈடுபட வேண்டும்—இரண்டு.

இது நிறைவேறியதும் உள் நாட்டிலிருக்கிற சில முதலாளிகளின் தலையில் தட்டி சமநிலைக்குக் கொண்டு வர வேண்டும்—மூன்று.

இந்த மூன்றையும் செய்தால் தான் இந்த நாட்டு மக்களுக்கு நல்ல வாழ்வு கிடைக்கும். ஒன்றைவிட்டு ஒன்றைத் துரத்திக்கொண்டு ஓடினால் பலன் கிடைக்காது.

* * *

தி. மு. கழகம் மூன்றையும் தீர்மானித்து வைத்துக் கொண்டு செயல்படுகிறது. ஆரிய — வர்ணாச்சிரம—மடமைக் கோட்டையை இடிக்கிறது; பிரிவினைக்குப் பாடுபடுகிறது. இதையடுத்து உள் நாட்டு சில்லரை முதலாளித்துவத்தை ஒழிக்கத் திட்டம் வைத்திருக்கிறது. கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை முறை இந்த வரிசையில் அமையவில்லை. காரணம், அது திராவிடத்திற்காக ஆக்கப்பட்ட கொள்கை அல்ல. ரஷ்யாவுக்காக உருவாக்கப்பட்டது.

* * *

எல்லா நாடுகளிலும் கம்யூனிஸ்டுகளே இடதுசாரிப் பெருங் கட்சியாளர்களாக இருக்க, தென்னாட்டில் தி.மு. கழகமே பெருங் கட்சியாக இருப்பதற்கு, இந்த அடிப்

படைதான் காரணம். இது மக்களுக்குப் புரிகிறது ; ஒப்புக்கொள்கிருர்கள். இது கம்யூனிஸ்ட் கட்சியின் பொருமையைத் தூண்டிவிட்டு ஆத்திரப் போக்கில் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறது. ஆகவே, ரஷ்யாவைப் பெருமைக்குரிய நாடாகக் கருதுகிற மக்களைப் பார்த்து, "தி. மு. கழகத்தார் ரஷ்யாவையே எதிர்க்கிருர்கள்!" என்கிருர்கள். உடனே மக்கள் நம்மீது பாய்ந்து சாய்ந்துவிடுவார்கள் என்றும் எதிர்பார்க்கிருர்கள். உண்மையில் மக்கள் அந்த அளவுக்கு மடையர்களல்ல. மக்கள் ரஷ்யாவை மதிக்கிருர்களே தவிர, ரஷ்யாவின் 'காற்செருப்பாக' உழைக்கத் தயாராயில்லை.

* * *

ரஷ்யா ஒரு புதிய சமுதாயத்தை உற்பத்தி செய்துகொண்டதா? —பாராட்டுவோம்.

ரஷ்யா சமாதானத்துக்கு உழைக்கிறதா? —சரி ; போற்றுவோம்.

ரஷ்யாவை அமெரிக்க வெறியர்கள் தாக்குகிருர்களா? —பலமாக எதிர்ப்போம்.

ஆனுல், ரஷ்யா பாடுகிற சகல பாட்டுக்கும் தாளம் தப்பாமல் ஆடிக்கொண்டிருப்பது நமக்கு உடன்பாடல்ல. ஒரு நாட்டின் பெருமையைப் பாடுகிறவர்கள், அந்த நாட்டின் தலைமையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது இமயமலையவ்வளவு மடமையாகும்.

* * *

ரஷ்யாவின் விரோதிகளெல்லாம் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் விரோதிகள். ரஷ்யா, அமெரிக்கரை வெறியர்கள் என்ருல், இவர்களும் "ஆமாம்! வெறியர்கள் தான்" என்பார்கள். அமெரிக்கா நமக்குச் செய்த தீங்கு என்ன என்பதைக் காட்டிலும் ரஷ்யாவுக்குச் செய்த தீங்கு என்ன என்பதையே சிந்திப்பார்கள். நாம் அப்படிச் செய்ய முடியாது. நமக்கு—நம் நாட்டுக்கு-நல்வாழ்வுக்குத் தீங்கிழைப்போர் யாராயினும்அவர்கள் நமது விரோதிகள்— இதுதான் நமது கொள்கை. அது அமெரிக்காவாயிருந்தாலும் சரிதான்; ரஷ்யாவாயிருந்தாலும் சரிதான் ; அதன் பாட்டனுயிருந்தாலும் சரிதான்.

வள்ளுவன் மூத்தோன்!

சொலல் முறையிலும் தெளிவிலும் அழகிலும் கருத்திலும் "கம்பன் மூத்தவனு? வள்ளுவன் மூத்தவனு?" எனக்கேள்வி எழுவதே அசம்பாவிதம். வள்ளுவன் பேரறிஞன், பெருங்கவிஞன், தீர்க்கதரிசி, நிரந்தரக் கவிதை சமைத்தவன். கம்பன் அழகாக வர்ணித்தவன்—ஆனுல், என்றேனும் ஒருநாள் சாகக் கூடிய பொருள்பற்றிக் கவிதை சமைத்தவன். எந்த நிலையிலும் கம்பன், வள்ளுவனுக்கு முன்னுல் நிற்கமுடியாது. வள்ளுவன் பாடிய வாழ்க்கை நெறியைக் கம்பன் துளிகூடத் தொடவில்லை என்பதை இதற்கு உதாரணமாகக் கொள்வதைவிட, கம்பன் நாலு வரியில் சொன்ன விஷயத்தை அதைக்காட்டிலும் அழகாக இரண்டு வரியில் வள்ளுவன் சொன்னுன் என்பதை எடுத்துக் கொள்ளலாம். ஒரே ஒரு உதாரணம்.

இராமன் காட்டுக்குப் போகப்போகிருன். அந்த நேரத்தில் சீதை விம்மி விம்மி அழுகிருள். ஏன் அழுகிருள்? கம்பன் சொல்கிருன் :

"நாயகன் காட்டுக்குப் போகப் போகிருன் என்பதற்காக அழவில்லை; ராச்சிய பாரத்தை இழந்து விட்டுப்போகிருனே என்பதற்காகவும் அழவில்லை. ஆனுல், போகிற இராமன், அவளிடம் வந்து, "கண்ணே! சீதா! கவலைப்படாதே! நான் சென்று வருகிறேன்!" என்று சொன்னுனே, அந்தச் சொல் செவியைச்சுட, அவள் தேம்பித் தேம்பி அழுகிருள்!"

நாயகன் வனம் நண்ணலுற்ரு னென்றும்
மேய மண்ணிழந்தா னென்றும் விம்மலள் ;
'நீய வருந்திலே! நீங்குவன்யா' னென்ற
தீயவெஞ்சொல் செவிசுடத் தேம்புவாள்!

—இது பாடல்.

கணவன், "போய் வருகிறேன்" என்று சொன்னதும், ஆரியப் பத்தினி சீதை விம்மி விம்மி அழுகிருள். அவ்வளவுதான்! அந்த வார்த்தை அவள் செவியைச் சுட்டது! அவ்வளவுதான். ஆனுல்....வள்ளுவன் காட்டும் திராவிடத் தலைவி, அதே நிகழ்ச்சியில் எப்படி இருக்கிருள்?

தலைவன் அவளிடம் வந்து, 'கண்ணே! நான் போய் வருகிறேன்!" என்கிருன். தலைவி ஊடி, "நீங்கள் இங்கேயே இருக்கவேண்டும்!" என்கிருள். "இல்லை கண்ணே! போய் வந்துவிடுகிறேன்! என்கிருன் தலைவன். உடனே தலைவி, "போகாமல் இருப்பதானுல் என்னிடம் சொல்லுங்கள். போய்த் திரும்பி வருகிறேன் என்று சொல்லுவதானுல், நீங்கள் திரும்பி வரும்போது யார் உயிருடன் இருப்பார்களோ அவர்களிடம் சொல்லுங்கள்" என்கிருள். அவன் போனுல் உயிர் பிரிந்துவிடும் என்பதைத் தலைவியின் வாய்மூலம் விளக்குகிருன் வள்ளுவன்.

செல்லாமை உண்டேல் எனக்குரை! மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க்குரை!

நான்கு அடியில் 'பிரிவு சுடும்' என்கிருன் கம்பன்.

இரண்டு அடியில் 'பிரிவு கொல்லும்' என்கிருன் வள்ளுவன்.

அழுத்தமான கருத்து ; மறவர் ஒழுக்க மாண்பு பற்றியது. வள்ளுவனின் இரண்டடிக் கூற்று. மிகமிகச் சாதாரணம் கம்பனின் கூற்று!

—கண்ணதாசன்

இதோ! தலைசிறந்த படங்கள்!

திருச்சி தஞ்சாவூருக்கு நாங்கள் விநியோகிக்கிருேம்!

நேஷனல் புரொடக்ஷன்ஸ்:

அம்மையப்பன்

மதருஸ் பிக்சர்ஸ்:

செந்தாமரை

வி. சி. சுப்பராமனின்: மேனகா

பத்மினி பிக்சர்ஸ்: முதல் தேதி

மற்றும்,

கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி, சொர்க்கவாசல்
— நால்வர், பணம், ஆசைமகன், மாங்கல்யம் —
மற்றும் பல படங்கள்!

ராணி பிக்சர்ஸ்

திருச்சி.

கட்டபொம்மன்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

கட்டபொம்மன்: என்ன சொன்னீர்! அடிமையாம் அடிமை! யாருக்கு யார் அடிமை? பூனைக்குப் புலி அடிமையா? சிறு நரிக்குச் சிங்கம் அடிமையா? அகிலமெல்லாம் கட்டியாண்டவன் அடிமைப் பட்டுப் பழகியவனல்ல! வீரத்தமிழ் நாட்டான் வேற்று நாட்டானுக்கு அடிமையா? தெப்பங் கடந்து கப்பம் பெற்று செகமெல்லாம் புகழ் பரப்பிய செந்தமிழ் நாட்டானு உமக்குக் கப்பம் அளிக்க ஒப்பம் அளிப்பான்! நினை விழந்து கனவு காணுதீர்! நாம் உமக்கு அடிமை—கப்பம் கட்டி கைகட்டி வாழவேண்டும்! நச்சுமொழிகளை அச்சமின்றி இச்சபை நின்று கூருதீர். நாயினும் கேடடைவீர்! அடிமையாம்! அடிமை! கப்பம் கட்டவேண்டுமாம்! கப்பம் (கோபத்துடன் சிரிக்கிறுன்)

தானுதிபதி: அரசே! அவைக்குத் தூதராக வந்தவரிடம் ஆத்திரப்படுதல் நல்லதல்ல. நமது ஆத்திரத்திற்குப்பாத்திரமானவர் களின் ஆணைக்கு அடங்கி வந்தவனே இந்த ஆலன்! தூதனை அவமதித்தல்.......

கட்டபொம்மன்: ஆம்! விட்டில் பூச்சியைத் தட்டி அழிப்பதை விட்டு, கட்டிப் பிடித்தா கருவறுக்கவேண்டும்?

தானுதிபதி: அரசே! மன்னிக்கவேண்டும்! தூதாகவந்தவரின் நியாயங்களைக் கேட்டுத் தெரிவதுதான் நேர்மை....அதுவே நீதியும். தெரிந்தபின் அறிந்து செய்யலாம்!

கட்டபொம்மன்: அறிந்து செய்வதற்கு அப்படியென்ன அவசியம் வந்துவிட்டது? வெள்ளைத்துரை எண்ணி வந்தது இன்னுமா வெளியாகாதிருக்கிறது? ஆற்காட்டு நவாப் தன் அதிகாரத்தை வெள்ளை ஏகாதிபத்தியத்திற்கு அர்ப்பணம் செய்திருப்பான். ஏகாதிபத்தியம் சூழ்ச்சி வலையை விரித்து பாளையப்பட்டுக்களைத் தன் சொந்தமாக்கியிருக்கும்........அந்த வலையை விரித்து நம்மையும் அகப்படுத்த வந்திருக்கிறது இந்த ஆலன் ஏகாதிபத்தியம்!

தானுதிபதி: ஊம்.......

ஆலன்: இல்லை! வாங்கிய கடனுக்காக வரி வசூலிக்கும் பொறுப்பை ஏற்று அதற்காக வந்திருக்கின்றேம்!

கட்டபொம்மன்: ஆமாம்! (ஏளனச் சிரிப்பு) ஆலன் அதனை இப்போது வாங்கிச் செல்ல வந்திருக்கின்றுர்....ஏன் அப்படித் தானே!

ஆலன்: ஆமாம்!

கட்டபொம்மன்: பகற்கனவு காண்கின்றீர்!

ஆலன்: உமது முடிவு!

கட்டபொம்மன்: எமது முடிவு! எம்மிடருந்து உமக்குக் கிடைக்கும் முடிவுதானே! இதோ பாரும் (வாளினை உருவிக் காட்டுகின்றுன். ஆலன் அஞ்சி நடுங்குகின்றுன்) ஆலன்! ஏன்? அஞ்சி நடுங்குகின்றீர்! வாளைக் கண்டதும் தோள் நடுங்குகின்றதோ!

வெள்ளையத்தேவன்: இல்லை! தொடையும் நடுங்குகின்றது! தாள் பணிந்தால் வாழ்வீர்.

கட்டபொம்மன்: இன்றேல் தரணியினின்றும் மாய்வீர் என்று கூறும் வெள்ளைக்கூட்டத்திடம்—திறை பெற வந்திரா.......?

வெள்ளையத்தேவன்: இல்லை........சிறை பெற வந்திரா? கப்பம் பெற வந்திரா? சிறைக் கம்பி எண்ண வந்திரா? கம்பி எண்ணப் போகின்றேமே என்று கவலைப்படுகின்றீரா? கவலைப்படாதீர்! வரு விருந்தோம்பிய இந்தக் கைகள் தூதராக வந்தோரை வன் சிறையில் அடைக்க ஒப்பாது. அதனுல்தான்......

கட்டபொம்மன்: வணிகம் செய்ய வந்ததாக உரைத்தீர்கள்... வரவேற்றேம்! வாருங்கள் என்று வளப்பங்களையெல்லாம் எடுத்துரைத்தோம். விலைக்கு இடம்வேண்டும் என்றீர்கள்; விரும்பியதைக் கொள்ளுங்கள் என்று வேண்டுமட்டும் கொடுத்தோம்; விலையின்றிக் கொடுத்தோம்.

உரிமையோடு வாழ உத்திரவு கேட்டீர்கள். பெருமையோடும் வாழுங்கள் என்று பேராதரவு தந்தோம்! அமர ஆசனம் கொடுத்தோம்; அரியாசனத்தை இகழ்ந்தீர்கள். சுங்கமின்றித் தங்க இடங் கொடுத்தோம்; அங்கங்கே பங்கம் விளைத்தீர்கள். மனிதன் என்று உங்களை மதித்தோம்; எங்களை மடமாக்கி விட்டீர்கள். உரிமை கொடுத்தோம்; அதன் அருமை அறிய மறுத்தீர்கள்.

கப்பமின்றிக் கன்னித் தென்னுட்டிலே காலெடுத்து வைக்க விட்டது எங்கள் குற்றம்! அதற்காக நாங்கள் கப்பம் கட்டவும் வேண்டும்! உங்கள் காலடி பணியவும் வேண்டும்! ஒண்டவந்த பிடாரி ஊர்ப்பிடாரியை விரட்டும் கதையாகிவிட்டது.

தானுதிபதி: அரசே! திடமான முடிவை உடன் கூறி அனுப்புவதே முறை.

கட்டபொம்மன்: முடிவென்ன? அன்னியன் இந்த நாட்டில் அடியெடுத்து வைத்தல் ஆகாது என்று அறை கூவிக்கொண்டிருக்கும் நாம் கப்பம் கட்ட ஒப்பம் அளிப்பது எப்படி? கப்பம் கட்டாம லிருப்பதோடு மட்டுமல்ல! அன்னியருக்கு இந்நாட்டில் என்ன அதிகாரம்! இனி எங்கும் முழங்கட்டும் "வெள்ளையனே வெளியேறு" என்ற சங்கநாதம்" எட்டுத்திக்கிலும் எட்டட்டும்! முரசு கொட்டட்டும் முழங்கட்டும் சங்க நாதம் மூவேந்தர் நாட்டிலே! (அவையிலே "வெள்ளையனே வெளியேறு" என்று ஆரவாரம்)

ஆலன்: அரசே! இறுதியாக......

கட்டபொம்மன்: இருந்தால்........சொல்லலாம்.

ஆலன்: ஆண்டுதோறும் ஆங்கிலேயருக்குக் கப்பம் கட்ட வேண்டுமென்ற அவசியம் இல்லை! ஒரே தடவையில் ஓராயிரம் பொன் மட்டும்...அளித்துவிடுங்கள், கட்டினேம் என்றபெயருக்காக. பின்னர் சுதந்திர வீரர்களாகச் சுற்றித் திரியலாம். அன்பர்களாக வாழ்வோம் நாம்! இதுவே எங்கள் ஏகாதிபத்தியத்தின் இறுதி வேண்டுகோள்........

தானுதிபதி: சிந்திக்கத் தக்கதுதான்!

கட்டபொம்மன்: சிந்திப்பதென்ன? யாசகம் என்று கேட்டால் காசு பொன் மட்டுமல்ல சாசுவதமாக எங்கள் உயிரையும் சன்மானமாகத் தருவோம்! கப்பம் என்று கேட்டால் அந்தச் சப்பை வாயர்களுக்குத் தின்ன அப்பமும் தரமாட்டோம்!

அருந்தமிழ் நாட்டானைப் பார்த்து அடிமை என்று கூறிய உமது நாக்கை, இந்த நாட்டானைப் பார்த்து எடும் கப்பம் என்று நீட்டிய உமது கரங்களைத் துண்டித்திருக்கவேண்டும்! தூதர் என்பதால் 'போம்' எனக்கூறுகின்றேம்!

[ஆலன் அசையாது நிற்க] ஆலன்! அதிக நேரம் என் முன் நிற்காதீர்! உம் உயிருக்கே ஆபத்தாக முடியும். ஏகாதிபத்திய வெள்ளைத்துரைகளை ஈட்டி முனையிலே பேட்டி காணச் சொல்லும் போம் வெளியே! கோழைகளைப் பார்த்துக் கொக்கரிக்கின்றுள் செந்தமிழ்த் தாய் (சிரிக்கின்றுன் கட்டபொம்மன்—ஆலன் அரசவை விட்டு வெளியேறுகின்றுன்.)

ஊமைத்துரை: அண்ணு! தென்னுடு முழுதும் அன்னிய ஏகாதிபத்தியத்திற்கு அடிமை.......அவர்கள் அனைவரும் ஆங்கில ஏகாதிபத்தியத்தின் கைக் கூலிகள்; நெற்றியிலே நீரும், நெஞ்சிலே நூலும் கொண்டு, கையிலே கமண்டலமும் கழுத்திலே உருத்திராக்கமும் பூண்டு, கங்கைக்கரை காவிரிக்கரையை வீழ்ச்சியுறச் செய்வதைப் போல—கனகவிசயர் பரம்பரை திருவிடத்தைத் தீராப் படுகுழிக்குத் திருப்பி விட்டதைப்போல—நாட்டு மன்னர்களைப் பிரித்து ஆட்டும் சூழ்ச்சியால், வெள்ளைப் பரம்பரை நம்மை வேரறுக்கத் தொடங்கி விட்டது. அண்ணு! கன்னல் மொழி பேசி கடலிலே கலம் செலுத்தி எந்நாடும் தம் நாடாய் ஏற்றுக்கொண்டிருந்த வெற்றி வேந்தன் பரம்பரைதான்! ஆனுல் இன்றே தென்னுடு முழுதும் அன்னிய ஏகாதிபத்தியத்திற்கு அடிமை! அண்ணு! அடிமை!

கட்டபொம்மன்: சின்னஞ்சிறு பாளையப் பட்டெல்லாம் அவர்களைப்பற்றியே சிந்து பாடுகின்றது.

தானுதிபதி; வெடியும் துப்பாக்கியும் கண்டு வீரர்களெல்லாம் வெருண்டோடுகின்றனர்.

கட்டபொம்மன்: அதற்காக......

தானுதிபதி: நாம் பகைத்துக்கொள்ளவேண்டாம்.

கட்டபொம்மன்: பகைத்துக்கொள்வது யார்? வம்புக்கு வலியச் சென்றேமா? அவர்கள் வாயில் மண்ணிட்டோமா? அவர்கள் நாட்டை அடிமைப்படுத்தினேமா? இல்லையே! அன்னிய நாட்டினின்றும் கஞ்சித் தண்ணிக்கு அலைந்தோடி வந்தோர் நம்மைக் கப்பம் கேட்டால்—நாம் நாணிக் கோணி நலம் பாடித் திரியத்தான் வேண்டுமோ? வீரம் மானம் வெட்கம் விவேகம் ஒன்றும் அற்றவர்களா நாம்? வாழ்வது திருவிடம் வணங்குவது பிறரிடம்.

வெள்ளையத்தேவன்: அழித்தே தீரவேண்டும்! அன்னிய ஏகாதிபத்தியத்தை. படை கண்டஞ்சும் பயங்கொள்ளிகள் இங்கு வாழட்டும்! பச்சை ரத்தம் பரிமாறும் வீரர்கள் என்பக்கம் வரட்டும்!

தானுதிபதி: வெள்ளையத்தேவா! படை பலம் கண்டு பயந்து விடவில்லை; பக்கபலம் கண்டும் பயந்தோடவில்லை. வீரர்களாக நேர் நின்று போர் புரிந்தால் வெற்றி நமக்குத்தான்.......சுய நலத்திற்காக சூழ்ச்சி வலையை விரித்து சோம்பேறி வாழ்க்கை நடத்தும் அவர்களைக் கண்டால்—

காட்சி: 8.

[விகடகவி சாலை வழியில் பாடிக்கொண்டு வர வட மலையாண்டி எதிர்ப்படுகின்றுன்.]

விகடகவி: (பாட்டு) வெட்டிப் புதைத்திடுவேன்—நானின்று வெட்டிப் புதைத்திடுவேன்........

வடமலையாண்டி: (நடுநடுங்கி) ஐயையோ....! யாரை

விகடகவி: (பாட்டு) வெட்டிப் புதைத்திடுவேன்—வெள்ளை யரை வெட்டிப் புதைத்திடுவேன்.

வடமலையாண்டி: அதுதானே பார்த்தேன்........

விகடகவி: அட்டியெதுவரினும்—பகை ஆட்கள் எவர்வரினும் —(வெட்டி)

வடமலையாண்டி: என்ன........!

விகடகவி: வேற்று மொழி கொண்டு வந்தார்—இந்த நாட்டிலும் தான் திணிக்கின்றார்.

வடமலையாண்டி: அவரு யாரு........?

விகடகவி: வெள்ளையராயினும் நன்றே—அவர் வேற்றவராயினும் ஒன்றே (வெட்டி)

வடமலையாண்டி: அப்படியானால்.......நான்...?

விகடகவி: நீ யாரு.......?

வடமலையாண்டி: நானு? அஞ்சாமல் சொல்லட்டுமா? அஞ்சிச் சொல்லட்டுமா?, பயந்து சொல்லட்டுமா? பயப்படாமல் சொல்லட்டுமா?

விகடகவி: அஞ்சியே சொல்! அஞ்சாமல் சொல்! பயந்தே சொல்—பயப்படாமல் சொல்......? நீ யாரு?

வடமலையாண்டி: நானு....? நான்தான் வடமலையாண்டி.......!

விகடகவி: என்ன! வடமலையாண்டியா?

செந்தமிழின் நலம் பேணார்—இந்த
தேசத்தில் வாழ்வதும் ஏனோ
வந்த மொழியினைத் தூக்கித்—தலை
வைததாடுகின்றாரைச் சேர்த்து (வெட்டி)

வடமலையாண்டி: ஐயோ! என்னையுமா? (ஓடுகின்றான் வடமலையாண்டி)

விகடகவி: ஆம்! உன்னையும் தான் (துரத்துகின்றான் விகடகவி)

(காட்சி முடிகின்றது.)

காட்சி: 9.

[மார்க்ஸ்வெல் துரை தன் அவையிலே எட்டப்பன் தொண்டமான் இவர்களோடு உரையாடிக்கொண்டிருக்கும்போது கட்டபொம்மனிடம் வரி வசூலுக்குச் சென்ற ஆலன் வந்து சேர்கின்றான்.]

எட்டப்பன்: துரையவர்களே! தொண்டமான் நம் பக்கமிருக்கும் போது.......

தொண்டமான்: இந்த மண்டலமே நமக்குத் தானே சொந்தம்!

எட்டப்பன்: துரையவர்கள் பெருமை அந்த அரை குறைகளுக்குத் தெரியாவிட்டாலும் எங்களுக்குக் கூடவா தெரியாமல் போய் விடும்!

மார்க்ஸ்வெல்: தெரிந்தும்தான்......

தொண்டமான்: என்ன! தெரிந்தும் என்று இழுக்கின்றீர்! உங்களுக்குத் தெரியாமல் நாங்கள் எதைத்தான் செய்துவிட்டோம்! இனி எதைத்தான் செய்யப்போகின்றோம்!

மார்க்ஸ்வெல்: நீங்கள் அப்படி யொன்றும் இல்லை.

தொண்டமான்: வேறு யார்? அவ்வாறு நடந்துகொண்ட அற்பன், அயோக்கியன் யார்?

மார்க்ஸ்வெல்: எவனோ! கட்டபொம்மனும்! ஊமைத்துரையாம்! வீரன் வெள்ளையத் தேவனும்!

எட்டப்பன்: ஆமாம்! துரைகளே ஆமாம்! அவர்கள் செய்யும் அக்கிரமங்களுக்கு.......!

தொண்டமான்: கணக்குத்தான் ஏது? வழக்குத்தான் ஏது? கண்டிப்பதற்கு ஆட்கள் தான் ஏது?

எட்டப்பன்: பாஞ்சாலங் குறிச்சி மக்கள் பாக்கியசாலிகளாக வாழவேண்டும்! பக்கத்திலிருக்கும் பாளையக்காரர்களெல்லாம் பஞ்சத்திலே கிடந்து பரிதவிக்கவேண்டும்; இந்த எண்ணம்...

தொண்டமான்; அந்த கட்டபொம்மனின் திட்டம்......

மார்க்ஸ்வெல்; நாட்டுப் பற்றைப் போற்றத்தான் வேண்டும். அதற்காக.......

எட்டப்பன்: கொள்ளையடித்துப் பொருள்களைக் கொண்டு செல்கின்றான்.......போனது போகட்டும். கும்பினியாரை அடைந்த எங்கட்கு இனிக் குறை ஏது?.......எல்லாம்......(இந்த நேரத்தில் ஆலன் அவையினுள்ளே நுழைகின்றான்)

மார்க்ஸ்வெல்: ஆலன்! வாரும்! வாரும்!! வெற்றி பெற்றீர்! வெல்க நமது எண்ணம்!

ஆலன்; வெற்றியா? வீரபாண்டியக் கட்டபொம்மனிடமா? புலிக் கூண்டில் புல்லால் தேடிய கதையாக......தலைதப்பி வந்ததே...

எட்டப்பன்: தம்பிரான் செயல்தானே?

தொண்டமான்: விட்டுவைத்தல் ஆகாது அந்த வீணனை......

மார்க்ஸ்வெல்: என்ன சொன்னான்? கப்பம் கட்ட.......

ஆலன்: ஒப்ப முடியாது, தப்பிப்போ என்று தலைதெறிக்க விரட்டினான்!

மார்க்ஸ்வெல்: ஒன்றும் சொல்லவில்லையா?

ஆலன்: சொன்னான்! "வெள்ளையனே வெளியேறு" என்ற சங்கநாதம் திக்கெட்டும் முழங்கட்டும் என்று.

மார்க்ஸ்வெல்: (சிரிக்கின்றான்) வெள்ளையன் இந்த நாட்டை விட்டு வெளியேறினால் வீரபாண்டியக் கட்டபொம்மன் இந்த உலகினை விட்டே வெளியேறவேண்டும்? திமிர்வாதக்காரன்...... (சிரிக்கின்றான்)

எட்டப்பன்: உங்களையும் எதிர்க்கத் தொடங்கிவிட்டான் அந்த ஊதாரி. அவன் மேல் ஒன்றும் தவறில்லை...வெள்ளையத்தேவனும்! வீரன்; அவன் தான் பகதூர் வெள்ளை! அந்த மறவப்பயல் பக்கத் துணை! நம்மைப் பகைக்கவும் அதுதான் காரணம்......தானுதிப்பதி யாம் அந்தத் தயாநிதியும் அவனுக்குத் துணை......

தொண்டமான்: கட்டபொம்மன் நல்லவன்தான்! அவன் காலம் அவனை ஆட்டி வைக்கிறது.

மார்க்ஸ்வெல்: எட்டப்ப நாயக்கரே! இதோ பாரும்! பத்திரம்! அருங்குளம், கப்பலாபுரம் இரண்டும் இனி உமக்குச் சொந்தம். வரி வசூல் உம்மைச்சாரும்! மகிழ்ச்சிதானே!

எட்டப்பன்: தயவிருந்தால் அதுவே போதும்! அந்த இரண்டு ஊர்களும் அவர்களைச் சார்ந்தவை யென்று அடிக்கடி கூறிவருகின்றனர்.......அவற்றிலே நாம் ஏன்.......?

மார்க்ஸ்வெல்: ஏன் அஞ்சுகின்றீர்? அச்சம் ஏன்? ஆங்கிலேயர் ஆதரவிருக்கும்போது பச்சாத்தாபமேன்? அது பயங்கொள்ளிகளுக்கல்லவா? வேண்டும்? போய் வாருங்கள்! படை பலம் குறையாமல் பாதுகாத்து அனுப்புங்கள்.......!

(தொண்டமானும் எட்டப்பனும் புறப்பட்டுச் செல்லுகின்றனர்.)

ஆலன்: எட்டப்பனுக்கு இரண்டுஊர்கள் தானமா? அநியாயம்!

மார்க்ஸ்வெல்: ஆலன்! அநியாயமாகவல்ல! நியாயமாகத் தான்!

ஆலன்: நியாயமாகவா?

மார்க்ஸ்வெல்: ஆமாம்! தூண்டிலில் இரை போடப்பட்டிருக்கிறது. வீரபாண்டியன் ஊர்கள்தானே அவை! அவற்றைக் கொடுத்தோம்! வாங்கும்போது எட்டப்பன் நாட்டையும் இணைத்துப் பெறுவோம்! அதுமட்டுமல்ல ஆலன்! இந்த நாட்டைப் போர் முறையால் யாருமே வென்றதில்லை. அசோகன்கூட தமிழ் நாட்டின் எல்லையாகிய கலிங்கத்திலேயே அயர்ந்துவிட்டானே! வரலாறு தெரியாதா என்ன? வடவர் இந்நாட்டைச் சூழ்ச்சியால் அடிமையாக்க வில்லையா? அந்த முறையை அந்த சூழ்ச்சியை நாம் அரசியலில் கைக்கொள்ள வேண்டும்! இனத்தோடு இனம் மோதவிட்டு இனத்தாலேயே இனத்தை அழிக்கவேண்டும்! புரிகின்றதா? ஆலன், புரிகின்றதா? ஆலன்! இந்த இனம் இருக்கின்றதே! இது நாய்க்கூட்டம் இன்நத்தை வாழவிடாது. (மார்க்ஸ்வெல் சிரிக்கின்றான். ஆலனும் உடன் சேர்ந்து சிரிக்கின்றான்)

காட்சி: 10.

[அருங்குளம் எட்டப்பன் பாசறை. எட்டப்பன் கட்டபொம்மன் படைஞர்கள் போர் புரிகின்றனர்—இறுதியில் எட்டப்பனும் வெள்ளையத்தேவனும் ஒருவரை ஒருவர் எதிர்க்கின்றனர்.]

வெள்ளையத்தேவன்: ....யார்? எட்டப்ப நாய்க்கனா?......

எட்டப்பன்: யார்? பகதூர் வெள்ளையா?

[வாட்போர் நடைபெறுகிறது—எட்டப்பன் பின் வாங்குகின்றான்.]

வெள்ளையத்தேவன்: அரண்மனை வாழ்விற்காக அன்னிய நாட்டானை அடிவருடிப் பிழைக்கும் அற்பனே! உன் தோள் வலியை இந்தத் தோழனிடம் காட்டுவது தானே! உனது வல்லமையை இந்த வாளின் முன் காட்டுவதுதானே! உன் வீரத்தை இந்த வேலின் முன் எடைபோடுவது தானே! பேடிக்கு வீர உடை.......வெற்றிச்சின்னம்! ஏன்? விழிக்கின்றாய்! இறக்கப்போகின்றோம் என்ற எண்ணமா? கப்பலாபுரம் அருங்குளத்தில் கப்பம் பெற வந்தனையோ?

[இந்தச் சமயத்தில் எட்டப்பன் தளபதி வருகின்றான் —தளபதியைப் பார்த்து.]

எட்டப்ப நாயக்கரின் மட்டித் தளபதியே! எட்டிப்போ! (தளபதியும் எட்டப்பனும் படைஞரோடு பின் வாங்கியோடுகின்றனர்.) கோழைகளுக்குக் கும்மாளம்! கூத்து! கொண்டாட்டம்! எட்டப்பன் பட்டாளத்தின் காரமும் வீரமும் காற்றில் பறக்கிறது. இந்தக் காட்டிக்கொடுக்கும் கயவர் கூட்டம் நாட்டிலே வாழும்வரை, நாட்டிற்கு நல்ல காலம் எங்கே வரப்போகிறது?

—சிலம்பின் செல்வன்

(தொடரும்)

பொழுது போகல்லியே!

— வ. ரா. —

★

பண்டைக் காலத்து அரசர்கள் மாறுவேஷம் போட்டுக்கொண்டு, நகர சோதனை செய்வார்களாம். ஜனங்களின் உண்மையான நிலைமையை நேரே அறிந்து கொள்ளுவதற்கு இது ஒரு நல்ல சாதனம் என்பதில் சந்தேகமில்லை.

நீங்களும் நானும் அரசர்கள் இல்லை. ஆகவே, மாறுவேஷம் போட்டுக்கொண்டு நகரசோதனை செய்ய வேண்டியதில்லை. நமது சொந்த வேஷத்திலேயே போகலாமே! அப்படியானால், இப்பொழுதே புறப்படுவோமே! நல்லது.

அந்த பங்களாவைப் பார்ப்போம். அதிலே பல பெண்மணிகள் கூடிக்கொண்டிருக்கிறார்கள். ஆளுக்கு, கையில் ஒரு விசிறி. முகம் துடைக்க, கைக்குட்டை. அவர்கள் ஒருவர் மற்றவரைப் பார்த்து, 'பொழுதே போகல்லியே! என்ன செய்யலாம்? சினிமாவுக்குப் போகலாமா?' என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த இடத்தைவிட்டு நகர்வோம். அதோ இருக்கிறது ஜுபிடர் க்ளப். இங்கே கூடியிருப்பவர்கள் ஆண்கள். இங்கிலீஷ் படித்தவர்கள். நல்ல உத்தியோகத்தில் அமர்ந்திருப்பவர்கள். இவர்கள் மத்தியிலும் அதே பேச்சுத்தான். 'ஏன் ஸார், பொழுதுபோகலியே! சீட்டாடலாமா' என்கிறார்கள்.

அப்பால் செல்வோம். இளைஞர்கள் கொம்மாளமாக இருக்கிற இடம். 'போடா போ. பொழுது போகமாட்டேன் எங்கிறது. என்ன அநியாயமடா! என்ன் பண்ணலாம் என்று தெரியவில்லை' என்று பேசிக்கொள்ளுகிறார்கள். இப்படியே, கூலிக்காரர்களாக உழைத்து வயிறு வளர்க்கும் பேர்வழிகள் வரையில், நமது நாட்டில் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இது ஒரு சித்திரம்.

ஐரோப்பிய நாடுகளைப் பார்க்கலாம். சாதாரண காலங்களில் அந்த நாடுகளில் பேசிக்கொள்வதைப் பார்த்தால், விநோதமாயிருக்கும். 'பொழுது இவ்வளவு சீக்கிரமாகப் போகிறதே! கையில் இருக்கிற வேலைக்கு, பொழுது போதவில்லையே' என்று சொல்லுகிறார்கள். அந்த நாடுகளில் அரசன் முதல் ஆண்டி வரையில் (ஆண்டியிருந்தால்!) இதே பேச்சுத்தான் பேசுகிறார்கள். இந்தச் சித்திரத்தையும் பாருங்கள்.

நம்மவர்களுக்கு ஏன் பொழுது போகவில்லை? அவர்களுக்கு ஏன் பொழுது போதவில்லை? இவைகளுடைய காரணங்களைத் தெரிந்து கொள்ள வேண்டாமா?

* * *

பொழுது என்பது வெருட்டி அடித்தாலும் போகிற பொருள் அல்ல. பொழுது என்பதை நிர்மாணிப்பது, உருவம் கொடுத்து அமைப்பது சூரியனும் அல்ல, கடியாரமும் அல்ல. பொழுது என்பது பேயும் அல்ல.

அப்படியானால் பொழுது என்பது என்ன? பொழுது என்பது வேலைதான். வேலை செய்து கொண்டேயிருந்தால், பொழுதைப் பற்றிக் கவலையே இருக்காது; கவனமே இருக்காது. பொழுது தானாகப் போய்விடுகிற மாதிரி தோன்றும். ஆனால், வேலையில்லாமல் போனால் பொழுது நமது கண்முன்னே அசையாமல் தொங்கிக்கொண்டு துன்புறுத்திக் கொண்டேயிருக்கும். ஏதாவது ஒரு வேலை செய்து கொண்டிருந்தால்தான், உடல் ஆரோக்கியமாயிருக்கும்; மனம் நிம்மதியுடன் இருக்கும்.

வேலை இல்லை என்றால் உடல் கெட்டுப் போகும்; மனம் தளர்ந்து போகும்.

கிறதா? வெள்ளைக்கார தேசங்களில் பொழுது லாகவமாகப் போகிறபோது, அது இந்த நாட்டில் ஏன் லாகவமாகப் போகவில்லை? நாம் முட்டாள்களா? அவர்கள் அறிவாளிகளா? இரண்டுமில்லை.

* * *

காரணத்தை வேறு வகையில் கண்டுபிடிக்க முயலவேண்டும். வெள்ளைக்காரர்களுக்கு வாழ்வில் அபரிமிதமான ஆசை. வாழ்க்கையில் மகத்தான இன்பத்தை அனுபவிக்க வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டு அதற்

'அக்ரகாரத்து அதிசயப்பிறவி' என்று அறிஞர் அண்ணாவால், பாராட்டப்பட்டவர் பெரியார் வ. ரா. சீர்திருத்தத்தில் அவருக்கிருந்த பற்று அளவிடமுடியாததாகும். அறிஞர் அண்ணாவிடத்தில் மட்டற்ற அன்பு கொண்டவர். பார்ப்பனராகப் பிறந்து, சாதி ஒழிப்பு வீரராகப் பணியாற்றியவர். பார்ப்பனர்களில் சிலர் இவரது கொள்கையைப் பின்பற்றி வாழ்ந்ததும் வாழ்வதும் எனக்குத் தெரியும். ஒரு பிரபல வாரப் பத்திரிகையில் வ. ரா. கட்டுரைகள் எழுதிக்கொண்டு வந்தார். அதில் இவர் மூடக் கொள்கையைச் சாட ஆரம்பிக்கவே, பார்ப்பனரான அந்தப் பத்திரிகை அதிபர், இவரை 'எழுத வேண்டாம்' என்று கூறி, பணம் மட்டும் கொடுத்து வந்தார்.

சென்சார் போர்டு அதிகாரியாக இருந்த ஸ்டாலின் சீனிவாசன், மஞ்சரி ஆசிரியர் தி. ஜ. ரங்கநாதன் ஆகியோர், இவரது நெருங்கிய சீடர்களாவர்.

நான் கட்சிப் பற்றற்று வாழ்ந்த காலத்திலே வ. ரா. வுடன் பேசிப் பழகும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது—இந்தக் கட்டுரை பதினைந்து ஆண்டுகட்கு முன்பு 'சக்தி'யில் அவரால் எழுதப்பட்டது.

—கண்ணதாசன்.

'என்ன ஸார்! வேலை செய்ய வேண்டும் என்கிறீர்களே, என்ன வேலையைச் செய்கிறது? அதை எவ்வாறு செய்கிறது? அதை எவ்வளவு நேரம் செய்கிறது? எந்த நோக்கத்துடன் செய்கிறது?' என்று இப்படியெல்லாம் கேள்வி போட்டு, என்னைத் துளைக்க ஆரம்பித்து விடுவீர்கள். பொழுது போகவில்லையே என்று நீங்கள் சொன்னதனால், வேலை செய்ய வேண்டும் என்று சொன்னேன். 'அதற்குமேல் எனக்கு ஒன்றும் தெரியாது' என்று நான் சொன்னால் என்னை நீங்கள் லேசிலே விட்டு விடுவீர்களா?

பதில் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். 'பொழுது போகலியே' என்று சொல்லுபவர்கள், உண்பதில்லையா, உறங்குவதில்லையா? மற்றும் பல காரியங்களைச் செய்வதில்லையா? அப்படியிருந்தும் அவர்களுக்கு ஏன் பொழுது போகவில்லை? அவர்களுடைய மனதிலே ஏதேனும் விகாரம் அல்லது விகற்பம் ஏற்பட்டிருக்

குத் தக்கபடி வாழ்கின்றார்கள். ஆகவே, அவர்கள் ஒரு நிமிஷமாவது சோம்பலாய் இருப்பதில்லை. ஏதாவது ஒரு காரியம் செய்து கொண்டே இருக்கிறார்கள்.

இந்த நாட்டிலோ வாழ்க்கையில் துளிக்கூடப் பிடித்தமேயில்லை. 'போட் மெயி'லுக்கு டிக்கட்டு வாங்கி ஸ்டேஷனில் காத்துக் கொண்டிருக்கும் பிரயாணியைப் போல், மனதை வைத்துக் கொண்டிருக்கிறார்கள் நம்மவர்கள். மயானத்தைப் போலிருக்கும் இந்த உலகத்தை விட்டு வெகு சீக்கிரம் அகல வேண்டும் என்பதுதான் பிடிவாதமாக அவர்களுடைய நோக்கமாக இதுவரையிலும் இருந்து வந்திருக்கிறது.

விலங்கைப் போல நமது வாழ்க்கையைப் பற்றிக்கொண்டு கிடக்கும் இந்த நோயை அகற்றினாலொழிய, நம்மவர்களுக்கு விமோசனமே ஏற்படாது. 'வாழ்க்கை என்பது வெறும் பாழ்' என்று சொன்னவன் முட்டாள். அதை இப்பொழுது திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருக்கிறவன் அவனை விட முட்டாள். வாழ்க்கை ஏன் பாழ்? வாழ்க்கைக்குப் பிறகு என்ன இருக்கிறது என்புதைத் தெரிந்து கொள்ளாமலே, வாழ்க்கையை அவமதிப்பது அறிவீனமாகும்.

'வாழ்க்கை பாழ்' என்ற போலித்தத்துவத்தின் ஆட்சியால், இந்த நாடு கெட்டுப்போய் விட்டது. வாழ்க்கையில் எத்தகைய சுறுசுறுப்புக்கும் இடமில்லாமல் அது அடித்துவிட்டது. மனிதனுக்கு இருக்கக்கூடாத அற்ப குணங்கள் நம்மை வந்து சூழ்ந்து கொண்டு நிற்கின்றன. ஆகவே, எதற்கும் சமாதானம் சொல்லி, சோம்பிக் கிடக்கும் நிலைமைக்கு நம்மவர்கள் வந்து விட்டார்கள்.

'துன்பமே இயற்கையெனும் சொல்லை மறந்திடுவோம்' என்று பாரதி கட்டளையிடுவதுதான் உண்மை. 'வாழ்க்கை பாழ்' என்பது முழுப் பொய். வாழ்க்கையிலே, உன்னத ஸ்தானம் பெறாமல், ஆசைக்குத் தக்க பலன் கிடைக்காமல், மனம் கசந்து, மனம் வெம்பிப் போன வீணர்கள், 'வாழ்க்கை பாழ்' என்று சொல்லலாம். புத்திசாலிகள் சொல்லமாட்டார்கள், சொல்லப்படாது.

'ஏன் பிறந்தேன், எப்படிப் பிறந்தேன், இனி எங்கே போவேன்?' இந்த மாதிரி கேள்விகளுக்கு, பதில் சொல்லுவது முடியாது. செத்தவர்கள் திரும்பினால் தெரியலாம். அது நேருவதில்லையானதால், இந்தக் கேள்விகளை வாய்சலிக்காமல் கேட்பதில் பயனில்லை. பயனில்லாத ஒரு வேலையைச் செய்து கொண்டு, சோம்பலுக்கு இருப்பிடமாக வளர்ந்து வந்த நம்மவர்கள் 'பொழுது போகல்லியே' என்று சொல்லுவதில் ஆச்சரியமேயில்லை.

* * *

பொழுது உருட்டிவிட்டால் போய் விடுமா? போகவே போகாது.

துன்பத்தை விலக்கி இன்பத்தை அடையும் முயற்சி நம்மவர்களுக்குப் பிடிக்கவில்லை. மேலும் பல நூற்றுண்டுகளாய், சிறிது சிறிதாக வலுக் குறைந்து கொண்டு வந்திருக்கிறபடியால், அவர்கள் ஏக்கத்தில் மூழ்கிக் கிடக்கிறார்கள். அவர்களுக்கு நேரான பார்வையில்லை; சுறுசுறுப்பான தோற்றமில்லை; தெளிவான நடையில்லை. தேக்கமுற்றுக் கிடக்கும் பாசி நிறைந்த குட்டையில் அகப்பட்டுக் கொண்டதைப்போல, அவர்கள் விழிக்கிறார்கள். இது ரொம்பக் கேவலமான நிலைமை.

மேல்நாடுகளில் புதிது புதிதாக வாழ்க்கைத் துறைகளில் சோதனை செய்து, நிலைமைக்குத் தக்கவாறு வாழ்க்கையை மாற்றி அமைத்துக் கொண்டு வருகிறார்கள். நாமோ சனாதனம் என்ற கருங்கல்லைக் கழுத்தில் கட்டிக் கொண்டு, மூச்சுப் போகும்படி

யாயும் விழிபிதுங்கும்படியாயும் வாழ்கின்றோம்.

'கர்ம பலன்' என்ற வேட்டை நாய் ஜன்ம ஜன்மங்களாக ஒருவனைத் துரத்திக்கொண்டு வருமாம்! இந்தப் பேதமையை என்னென்று சொல்லுவது; இந்தப் பேதமைக்குக் காரணம் என்ன? பெரிய காரியங்களை வாழ்க்கையில் சாதிக்காததே காரணமாகும்.

எப்பொழுது மாண்புடைய பொருள்களில் நம்மவர்களுக்கு நாட்டம் இல்லாமல் போய்விட்டதோ, அப்பொழுதே, அவர்களுடைய உள்ளத்தில் அச்சமும், அவல நினைப்பும் சாசுவதமாகக் குடியிருக்கத் துவங்கி விட்டன. இவைகள் நம்மை ஆட்டி வதைக்கின்றன.

இமயமலையின் உச்சியில் என்ன இருக்கிறது? வட துருவத்துக்குஅப்பால் மண்ணா, மணலா, கரையா, நீரா? ஆகாயத்தில் வயிரமடித்த களம்போல் அபூர்வமாகக் காட்சி தென்படுகிறதே, நட்சத்திரங்கள் அந்தரத்தில் தொங்குகின்றனவா? அதில் ஜனங்கள் வசிக்கிறார்களா? இவைபோன்ற கேள்விகளை மேல்நாட்டார் ஆராயப் புகுந்து அருமையான வேலை செய்து வருகிறார்கள். நாமோ அவர்களுடைய அரிய முயற்சியைக் கண்டு பிரமித்துப்போய் வாழ்கிறோம். நமக்கு ஏன் பொழுது போகும்?

நாமோ பொழுது போகாத மகான்கள்! அவர்களோ பொழுது போதாத முட்டாள்கள்!

* * *

பொழுது போகவில்லை என்று கண்ட வேலையைக் கையில் எடுத்துக்கொண்டு திண்டாடுவது அறிவாளிகளின் லட்சணம் அல்ல. வாழ்க்கையின் லட்சியத்துக்கும் வேலைக்கும் நெருங்கியசம்பந்தம் இருக்கவேண்டும். வேலைக்கும் அதைச்செய்து முடிக்க வல்ல சாதனத்துக்கும் நெருங்கிய சம்பந்தம் இருக்கவேண்டும்.

வாழ்க்கையில் குறியில்லாமல் வாழ்பவன் முட்டாள். அந்தப் பட்டத்தைச் சூட்டிக்கொண்டு நம்மவர்கள் எவ்வளவு காலம் வாழப் போகின்றார்கள்?

மேல்நாட்டு இலக்கியங்களில் மேல்நாட்டுக் கலைகளில், மேல்நாட்டு அற்புதமான இயந்திர வேலைப்பாடுகளில், நம்மவர்களுக்கு ஏராளமாக மோகம் இருக்கிறது. அப்படி யிருப்பது இயற்கைதான். இவைகளை யெல்லாம் வாழ்க்கையில் சேகரிக்க முடியாமல் போனதினால்தான், நாம் பொழுது போகாத நிலைமைக்கு வந்திருக்கிறோம்.

'இன்பமே வேண்டி நிற்போம்'. அதற்காகப் பாடுபடுவதுதான் முறை; அதற்காகப் பாடுபடுவதுதான் இயற்கை. பாடுபடாமல் இன்பத்தை அனுபவிக்க வேண்டும் என்பது அவல ஆசை. பசித்தவனுக்குத்தான் ஆகாரத்தில் ருசியிருக்கும். உழைத்தவனுக்குத்தான் பசியிருக்கும். பலனை எதிர்ப்பார்த்துத்தான் உழைப்பு இருக்க முடியும். லட்சியத்தைக் கருத்தில் கொள்ளாத வேலை, கடலை உழுவதைப் போன்ற, அறிவில்லாத வேலையாகும்.

அற்ப ஆயுள்படைத்த மனிதன் அந்த வாழ்க்கை எல்லைக்குள் குறிதவறாத நெறியோடு இன்பத்தை அனுபவிக்க எண்ணுவதுதான் இயற்கையான ஆசையாகும். அந்த இயற்கையான ஆசையை மறப்பது தவறு; மறுப்பது குற்றம்.

ஆகவே, லட்சியம் இல்லாததினால், நம்மவர்களுக்கு வாழ்க்கைத் திட்டம் இல்லை. வாழ்க்கைத் திட்டம் இல்லாததால், வேலை யில்லை. வேலை இல்லாததால், பொழுது போகவில்லை. ஆகவே, பொழுது போவதற்கு மருந்து லட்சியத்தைத் தழுவிய வாழ்க்கைத் திட்டமாகும். *

"தென்றல்" பாரதி மலர்

செப்டம்பர் 11–ம் தேதியன்று வெளிவருகிறது!

அறிஞர் அண்ணா, ஈ. வெ. கி. சம்பத், சிவப்பிரகாசம் B.A., அரங்கண்ணல்

மற்றும் பலர் மலரில் எழுதுகின்றனர்.

மலரில், 'பாரதியின் கொள்கைக் குழப்பம்—ஏன்?' — என்பதுபற்றி கண்ணதாசன் எழுதுகிறார். —

ஏராளமான படங்கள்! வரலாற்றுக் கதை!

விலை மூன்றணா

ஏஜண்டுத் தோழர்கள் தேவையான பிரதிகளுக்கு முன்கூட்டியே எழுதவும்.

நான்கு அணா ஸ்டாம்பு அனுப்புவோருக்கு மலர் அனுப்பிவைக்கப்படும்

எழுதுக:

"தென்றல்" : : சென்னை-14.

குழந்தை இன்பம்!

பூவிதழ்! முல்லைப் பற்கள்!
புடைத்திரு புலவு மூக்கு!
பூங்கனி சதைத்தேன் கன்னம்!
புதுஒளி பளிங்குக் கண்கள்!

விழியிடை ஒளியின் வீழ்ச்சி,
விரித்திடும் பொழிலின் காட்சி!
மொழியிடைக், கோலம் பாய்ச்சும்
முகில்களின் கன்னல் மாட்சி!

உடலெழில், பைம்பொன் தாதின்
சுடரொளிப் பரிதி வீச்சு!
அடவியின் கிள்ளைக் கோதை,
கடல்மடைத் திறப்புப் பேச்சு!

பதக்கம்போல் அழகு காட்டிப்
படிந்திடும்! அழகின் மேன்மை!
சதங்கையைக் குலுக்கி இன்பச்
சங்கமம் செய்வான், வந்தே!

குரல்வளைக் கழுத்தை ஆட்டி,
கூப்பிடும், 'அம்மா' 'அப்பா'!
விறலியின் அமுதம் ஏற்கும்!
வீணையின் நாதம் தோற்கும்!

குழகுசேர் வளைவுக் கொல்லை,
குயில்நிற வண்ணக் கூந்தல்!
அழகுசேர் இதயப் பாங்கு!
அதில்துளிக் கருப்பு இல்லை!

தெருவினில் முருகு கொட்டி
பெருமகிழ் வோடு ஆடும்!
திருகுடை நெஞ்சத் துள்ளும்
தேக்கிடும் இன்ப வெள்ளம்!

மேல்தேயக் 'கெபில்' கூறுவான்:
"மேலான பெருங் குணத்தார்
மேவிடும் உள்ளப் போக்கு—
ஓவியக் குழந்தை உள்ளம்!"

வஞ்சகம், தீமை, வாது
வகையெதும் அறியா உள்ளம்!
கொஞ்சிட, குழைவு நீட்டும்!
கொள்ளையே, 'குழந்தை இன்பம்!'

—இரா. வீரன்.

கொலைகாரன் தோள்களிலே குளிர்ந்த ரோஜா!

மாசிடோனிய நகரத்து வீரன் அலெக்சாண்டரை இருகரங் கூப்பி அழைத்தான் சாணக்கியன்; எதிரிக்குத் தலை வணங்கி பிறந்த நாட்டைக் காட்டிக் கொடுத்தான் என்று சரிதம் நமக்குச் சொல்கிறது.

வாழ வழி தேடி வந்த ஆங்கிலேயனுக்கு மூன்று லட்சம் பவுன் காசுக்காக பிளாசி யுத்தத்தில் சிராஜ் உத் தௌலா தோற்றுப் போக காரணமாக இருந்தான் 'உமீர் சந்த்' என்பவன். வெள்ளையர்களின் வேட்டைக் காடாக இந்திய உபகண்டம் மாறுவதற்கு காரணம் உமீர் சந்தின் துரோகம்தான் என்றால் மிகையாகாது என்று இந்திய சரித்திரம் நமக்குச் சொல்கிறது.

நண்பன் போல் நடித்து ரோம் நாட்டுப் போர் வீரன் ஜூலியஸ் சீசரை கொலை செய்தான் புரூட்டஸ் என்ற கொடியோன். "நான் சீசரைக் கொன்றது சீசரின் மீது நான் வைத்திருந்த அன்பு குறைந்து போயிற்று என்பதால் அல்ல. சீசரைவிட பதின் மடங்கு நான் 'ரோம்' மீது அன்பு செலுத்துகிறேன். அதன் காரணமாகவே சீசரைக் கொன்றேன்" என்று வாதாடினான் புரூட்டஸ்.

பகைவனுக்கு விருந்தளித்த புல்லர்கள், நாட்டுப்பற்று என்ற நினைப்பில் நாட்டையே அன்னியருக்கு காட்டிக்கொடுத்தவர்கள். பிறந்த நாடு மேன்மையுறவேண்டும்; மேதினியில் அதன் புகழ் ஓங்கவேண்டும் என்ற நினைப்பில் நாட்டுக்கு நல்லது செய்பவரைக் கொலை செய்தோர் பலர் உண்டு—சரித ஏடுகள் அவர்களை, துரோகிகள், கொடியவர்கள், மக்கள் எதிரிகள், அறிவற்றவர்கள், சூழ்ச்சிக்காரர்கள், சுயநலவாதிகள் என்று அழைக்கிறது. அவர்களிலே பலர் மடிந்து போனார்கள்; உலகில் இன்னும் சிலர் உலவுகிறார்கள்.

இந்திய உபகண்டத்திலே அத்தகைய பண்புடையவர்கள் கிடையாது எனலாம்.

ஆனால், நாட்டுப் பற்று என்ற போர்வையில் உண்மையாகவே நாட்டு முன்னேற்றத்தின் மீது அக்கரை கொண்டுள்ளோர்களை மதியாது, அவர்கள் மீதுள்ள கோபத்தால் பகைவனுக்கு வரவேற்பளிக்கும் பண்புடையோர் தமிழ் நாட்டிலே பலர் வாழ்கிறார்கள்.

பகைவனுக்கு வரவேற்பளிப்பது பண்பற்ற செய்கை என்பதை உலகோர் நன்கு உணர்ந்து கொண்டிருக்கிறார்கள். நானாவிதப் படைகளுடன் வேற்று நாட்டிலிருந்து படை திரட்டி நமது நாட்டைப் பிடிக்க வருபவர்களை பகைவர்கள் என்று கூறலாம்.

படை கொண்டு வருபவன் மட்டுமல்ல பகைவன். எதிரிகள் எனப்படுவோர் பலவகை உண்டு. மன்னன் உருவிலே, மன்னர்களின் அபிமான மங்கையரின் உருவிலே, மாற்று நாட்டு ஒற்றர்கள் உருவிலே பகைவர்கள் உள்ளே நுழைவது உண்டு. உலக மக்களிடையே நாகரீகம் அதிகம் பரவாத காலங்களிலே பகைவர்கள், எதிரிகள் எனப்படுவோர் இப்படி, இப்படி இருப்பார்கள் என்று திட்டமாகக் கூறலாம்.

நாகரீக வளர்ச்சியும் அரசியல் முதிர்ச்சியும் காணப்படும் இந்த நாட்களிலே பகைவன் எப்படி இருப்பான் என்று கூறுவது கடினமாகும்.

கவரிமான் சாதியடா! காட்டிக் கொடுத்தாயே!

அதிலும் குறிப்பாக அரசியல் கருத்துக்களில் வேறுபட்டு பணியாற்றுவோர் அனைவரும் பண்புடன் பழகவேண்டுமென்பது அவசியம். நாகரீக உலகு கூறும் பாடம் அது.

அரசியல் எதிரிகள் ஒருவரை ஒருவர் தூற்றிக்கொள்ளக் கூடாது என்பதற்காக அவர்களுடன் நேரம் காலம் இன்றி கட்டித் தழுவுவதும் கூடாது.

லண்டனில் இட்லர் குண்டு மாரி பொழியும்போது பாரிஸ் நகரத்தில் உள்ள பிரிட்டிஷ் தூதுவர், ஜெர்மானியர்களுக்கு விருந்தளிக்கிறார்கள் என்றால் அது நேர்மையான செய்கையா?

செத்தாரின் உற்றார்; சுட்டார்க்கு இட்டார்!

இது போன்ற செய்கை, பண்பு குறைந்த செயல், நம் நாட்டில் நடைபெற்றிருக்கிறது.

திருவிதாங்கூரில் பட்டம் தாணுப்பிள்ளை தமிழர்கள் மீது வீசியுள்ள அடக்கு முறைகள் பலப்பல. சென்ற 11-ம் தேதியன்று தமிழர்களை சுட்டுக் கொன்றிருக்கிறார். பட்டம் தாணு அவர்களின் சர்க்கார் அறிக்கை நான்கு பேர் மரணம் அடைந்தார்கள் என்கிறது. திரு-தமிழர் பகுதிக்கு சென்று வந்தவர்கள் மாண்டுபோன தமிழர்களின் தொகை 10க்கு மேல் இருக்கும் என்று கூறுகிறார்கள்.

மாணவர்கள் மீது தடியடி.

வீடணா உன் குணத்தை மிச்சம்வைத்துப்போனாயோ!

உரிமை வேண்டும் என்ற தமிழர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம்.

திரு-கொச்சி போலீசார் பயங்கர ஆட்சி நடத்துகிறார்கள்.

வீடு புகுந்து தமிழர்களை நையப் புடைக்கின்றனர்.

பெண்களை அவமானப் படுத்துகின்றனர்.

பேயாட்சி நடத்துகிறார் பட்டம். திருவாங்கூர் தமிழர் பகுதியிலே 'ரத்த வாடை' வீசுகிறது என்று அந்தப் பகுதிகளிலிருந்து வெளியாகும் செய்தித் தாள்கள் கூறுகின்றன.

தமிழர்களை சுட்டது நியாயம் தான் என்று பட்டம் தாணுப்பிள்ளை கொக்கரித்தார். இந்திய உபகண்டத்திலே உள்ள நல்லறிவாளர்கள் அனைவரும் பட்டம் தாணுப்பிள்ளையின் போக்கைக் கண்டித்தனர்.

'பட்டம் நடத்தும் பயங்கர ஆட்சி ஒழிக!'

'பட்டம் தாணுவே! பதவியை விட்டு வெளியேறு!' என்று திருவாங்கூர் தமிழர்கள் குரல் எழுப்பினார்கள்.

அதே நேரத்தில்! 'அன்பரே வருக. அருமைப் பட்டமே வருக. பிரஜா சோஷலிஸ்டுகளின் முதல் பிரதம அமைச்சரே வருக.

பட்டம் தாணுவே! பண்புள்ள மனிதரே வருக!

எங்கள் தலைவனே வருக! பிரஜா-சோஷலிஸ்ட் கட்சி ஜிந்தாபாத்!'

என்ற குரல் தென்னாட்டிலே கேட்டது. ஆகஸ்டு 11-ந் தேதி திருவாங்கூர் தமிழர்கள் துப்பாக்கிக்கு இரையானவர்கள் ஐயகோ! தமிழனே உனக்கென்று வாதிடுவார் யாருமில்லையா? கொலைக்களத்தில் நிற்கிறோமே! கேட்பாரில்லையா? என்று தமிழர்கள் கதறினார்கள்.

சுட்டு வீழ்த்தப்பட்ட பிணங்கள் புதை குழிக்குள் செல்லவில்லை. அங்கே குண்டு மாறி பொழிந்த போலீஸ் படை வாபஸ் பெறப்படவில்லை.

பட்டம் தாணுப்பிள்ளை திண்டுக்கல்லிலே பவனி வந்தார். கழுத்து நிறைய மலர் மாலைகள், கையிலே மலர்ச்செண்டு, இவைகளுடன் பட்டம் தாணு திண்டுக்கல்லிலே வரவேற்கப்பட்டார். திண்டுக்கல் பிரஜா சோஷலிஸ்ட் இளைஞர்கள் மாநாட்டிலே அவர் ஆகஸ்டு 16-ம் தேதி பேசினார்.

தமிழர்களைக் காரணமின்றி சுட்டு வீழ்த்திய பட்டம் தாணுவிற்கு திண்டுக்கல்லில் தமிழ் இளைஞர்கள் வரவேற்பளித்தார்கள். பட்டம் தாணு பகைவர் அல்ல. எதிரியுமல்ல. ஆனால் தன் இனத்து மக்களைச் சுட்டு வீழ்த்தியவராயிற்றே! துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்று இன்னும் பத்து நாட்கள்கூட ஆகவில்லையே! இது தகுமா, நாகரீகமான செயலா என்று திண்டுக்கல் பிரஜா சோஷலிஸ்டு இளைஞர்கள் உணராமற் போய் விட்டார்களா?

மாலை மரியாதைகளுடன் வரவேற்கப்பட்ட பட்டம் எண்ணியிருக்கமாட்டாரா? 'தமிழர்கள் நன்றி கெட்டவர்கள்; நேற்றுத்தான் சுடுமாறு உத்தரவிட்டேன். இன்று எனக்கு வாழ்த்துப்பா வாசித்தளிக்கிறார்களே!' என்று எண்ணியிருக்கமாட்டாரா?

திண்டுக்கல் மாநாட்டிலிருந்து திருவனந்தபுரம் திரும்பிய அவர் அங்குள்ள தமிழர்களைப்பார்த்து 'என்னைக் கொடியவன் என்று கூறுகிறீர்களே! நான் இப்போது எங்கிருந்து வருகிறேன் தெரியுமா? திண்டுக்கல்லிலிருந்து, தமிழர்கள்—உங்கள் சகோதரர்கள், அளித்த விருந்தில் மகிழ்ந்துதான் வருகிறேன்' என்று சொல்லாமற் சொல்லியிருப்பாரே!

சாணக்கியன் அலெக்சாண்டரை அழைத்தான் தகுதியான செயலா?

கிளைவுக்கு உமீர் சந்த் வாழ்த்துக் கூறினான். வரலாறு அச்செயலை வரவேற்கிறதா?

திண்டுக்கல்லிலே பட்டம் தாணுவுக்குக்கிடைத்த வரவேற்பு 'தமிழர்கள் அரசியல் வெறி கொண்டு இனத்தையே காட்டிக் கொடுக்கிறார்கள்; இன மக்களை சுட்டு வீழ்த்தியவருக்கு வாழ்த்துக் கூறுகிறார்கள்' என்பதைத் தானே எடுத்துக் காட்டுகிறது.

தான் சீசரைக் கொலை செய்தமைக்குக் கூறிய காரணத்தை ரோம் நகரத்து மக்கள் ஆதரிப்பதைக்கண்ட புரூட்டஸ் சிரித்திருக்கமாட்டானா?

அதே போல் தனக்கு திண்டுக்கல் தமிழ் இளைஞர்கள் அளித்த வரவேற்பைக்கண்டு பட்டம் புன்னகை புரிந்திருக்கமாட்டார் என்று சொல்ல முடியும்?

புரூடஸ் சிரிக்கும் சம்பவத்தைப் போன்றதுதான் புனிதவான்களின் கண்களிலே கண்ணீர் வழிந்தோடுமாறு செய்த வரவேற்பு. இச்செய்கை மூலம் திண்டுக்கல் பிரஜா சோஷலிஸ்டு இளைஞர்கள் தமிழரின் பண்புக்கு இழிவை உண்டாக்கி விட்டனர்.

ஆகஸ்டு 11-ம் தேதியன்று திருவாங்கூர் தமிழர் பகுதிகள் கொலைக்களம் போன்று காட்சியளித்ததாம். ஆகஸ்டு 16-ம் தேதி திண்டுக்கல் கோலாகலமாகக் காட்சி அளித்ததாம்.

தனது சொந்த சகோதரனை அடக்கு முறைச் சட்டங்கள் மூலம் காரின் கீழ் போட்டு மிதிக்கும் மனிதருக்கு வரவேற்பளிக்கும் அளவுக்கு தமிழ் இனம் தாழ்ந்து போய்விட்டதா? அல்லது பிரஜாசோஷலிஸ்டு கட்சியிலே மாபெரும் அரசியல் மேதைகள் நிறைந்து காணப்படுகிறார்கள் என்று நினைத்து, திண்டுக்கல் பிரஜாசோஷலிஸ்டு இளைஞர்கள் பண்பை இழந்து விட்டார்களா? இளைஞர்களின் இப்போக்கு நேர்மையானது என்று அக் கட்சியின் தமிழ் நாட்டுப் பெரியவர்கள் நம்புகிறார்களா? அல்லது பட்டம் அவர்களுக்கு இந்தப் பாலகர்கள் அளித்த வர

[11-ம் பக்கம் பார்க்க]

கடை திறப்புப் பகுதியில், செயங்கொண்டான்கூறிய சில காதல் நிலைகளை முன்பு சொன்னேன். அதிலே கன்னியர் தம் உருவப் பாங்கும் உள்ளப் பாங்கும் கூறி, சோழ தேசத்தின் கலையழகைக் கூறுகிறான், அவன் சோழத்தின் பெண்களில் மற்றும் சிலர் பற்றிக் கூறுகிறான்.

அவர்கள் ஆடவரின் இதயத்தை, கண்ணாலே புண்ணாக்கி விடுவார்களாம். பிறகு அந்தப் புண்ணுக்குக் கட்டுக்கட்டுவது போல் கொங்கைகள் சேர இறுக அணைத்துக் கொள்வார்களாம். மேற்கட்டுக்கட்டிவிட்டால் போதுமா? உள்ளேயும் மருந்து கொடுக்கவேண்டுமல்லவா? கட்டிக்கொண்ட அதே நிலையில் வாயிதழ் மருந்தைக்கொடுப்பார்களாம். கண்ணாலே புண்பட்ட இதயம் இப்படியாக ஆறிவிடுமாம்! அதாவது புண் கொடுப்பவர்களும் அவர்கள்; மருந்து கொடுப்பவர்களும் அவர்கள்! கணைகொண்டுவரும் பகைவன், மருந்துப் பெட்டியோடு வருகிறான்!

தங்குகண் வேல் செய்த
புண்களைத்
தடமுலை வேது கொண்
டொற்றியும்
செங்கனிவாய் மருந்தூட்டுவீர்
செம்பொன் நெடுங்கடை
திறமினோ!

—இதையே, இதே நிலையையே வள்ளுவன் ஓரிடத்தில் அழகாகக் கூறுகிறான். செயங்கொண்டான் கண் ஆக்கிய புண்ணுக்கு கொங்கைக்கட்டுப்போட்டு வாய்மருந்து கொடுத்து வைத்தியம் பார்க்கிறான். ஆனால் வள்ளுவனோ, கண் ஆக்கிய புண்ணுக்குக் கண்ணாலேயே மருந்து கொடுக்கிறான். சொல்லப்போனால், வைத்திய முறையும் அதுதான்.

இருநோக்கு இவள்கண் உளது;
ஒரு நோக்கு
நோய் நோக்கு; ஒன்று
அந்நோய் மருந்து

—பார்க்கிற விதத்திலே இரு வேறு நிலைகள்! விஞ்ஞான ரீதியான விளக்கம். ஆனால் அழகு, செயங்கொண்டான் கூற்றில் தான் உளது.

* * *

செயங்கொண்டானை அப்படியே விட்டுவிட்டு 'திடீ'ரென்று வேறொரு திசைக்குச் செல்வோம், அங்கே காளமேகம் உட்கார்ந்திருக்கிறான். சாதாரண மனிதர்களிலிருந்து அவன் மாறுபட்டவனல்லவா? அதற்காக, ரொம்ப அலட்சியமாக உட்கார்ந்திருக்கிறான். அவன் கையிலே ஒரு ஏடு இருக்கிறது. அது ஒரு காவியம் போலவும் தெரிகிறது. வெறும் சில்லறை வெண்பாவிலேயே திருப்தியடையும் அவன், காவியமும் எழுதியிருக்கிறான். இரண்டு இதுவரையில் தெரிந்திருக்கிறது; வெளி வந்திருக்கிறது. ஒன்று திருஆனைக்கா உலா. மற்றொன்று சித்திரமடல்.

* * *

சித்திரமடல், பாவை தெய்வங்கள் பெருமாள் என்பவனைப் பாட்டுடைத் தலைவனாக வைத்து எழுதப்பட்டிருக்கிறது. மடலேறுதலாகக் காவியம் புனைதல், பிரபந்தவகைகளில் ஒன்று. தான் விரும்பிய பெண்ணை அடையவிரும்புபவன் பனைக் குதிரை ஏறி நகர்வலம் வருதல் மடலேறல் எனப்படும். இந்த மடலில் காளமேகம் தனக்கு இயல்பான வர்ணனைகளில் 'ஓவ'ராகவும் போயிருக்கிறான். ஆனாலும் விறலி விடு தூதின் ஆசிரியனைக் காட்டிலும் அழகாகப் போயிருக்கிறான் என்றே நான் கருதுகிறேன்.

இந்தச் 'சித்திர மடல்' கலைக்களஞ்சியம் ஆசிரியர் தோழர் பெ. தூரன் பதிப்பித்து, கோவை புதுமலர் நிலையத்தார் வெளியிட்டிருக்கிறார்கள். ஏட்டுப் பிரதியிலிருந்து நேரடியாகப் பரிசோதிக்கப்பட்டு பதிப்பிக்கப்பட்டதாக பதிப்பாளர் முன்னுரையில் கூறுகிறார். இந்த நூல் கிடைப்பது அரிதாக இருக்கிறது. பதிப்பாசிரியர் மிக நல்ல முறையில் இதைப் பதிப்பித்திருக்கிறார் கவிதைகளுக்குத் தெளிவுபடப் பொருள் கூறியுள்ளார். இதன் பழைய கையெழுத்துப் பிரதி ஒன்றை, புதுவைத் தமிழழகனார் என்னிடம் தந்தார். அத்துடன் இந்த நூலை ஒப்பிட்டுப்பார்க்கும் போது, சில பகுதிகள் விடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. உண்மையில் அது அவர் கைக்குக் கிடைக்காமலும் இருந்திருக்கலாம். ஆயினும் 'சித்திரமடல்' பதிப்பு குறைபடவில்லை. முதலில் 'ஒருகதை' கூறி இதன் கருத்தை விளக்குகிறார், தோழர் பெ. தூரன். முதலில் அந்தக் கதையை அவர் நடையில் அப்படியே கொடுத்து, பிறகு காளமேகத்தின் அங்க வர்ணனை, காதல் வர்ணனை ஆகிய பகுதிகளுக்குப் போவோம். இந்தக் கதை தோழர் தூரனின் நடையில், அப்படியே எடுத்துத் தரப்படுகிறது.

ஒரு கதை

கட்டுறுதியுள்ள இளங்காளை அவன். கன்னிப் புதுமை பொங்கும் அவள். எதிர்பாராது இருவரும் காட்டு வழி தனிலே சந்திக்கின்றனர். அவள் கிளி ஓட்டுவதற்காகப் புனத்திடையே வந்திருந்தாள். அவன் மலைவளங்கண்டு இன்புறுவதற்காகப் புறப்பட்டு இயற்கை அழகிலே உள்ளத்தைப் பறிகொடுத்துக் கால்போன போக்கில் நெடுந்தூரம் வந்திருக்கிறான். அவன் உள்ளத்தை அவள் கவர்ந்தாள். அவள் உள்ளத்தை அவன் கவர்ந்தான். காதல் என்னும் தேன் நெருப்புக் கன்னியையும் காளையையும் தீண்டிவிட்டது ஒரே மூச்சில். புதியதோர் இன்ப உணர்ச்சி இருவர் உள்ளங்களிலும் சுரக்கின்றது ஒரே மூச்சில்.

அவள் அழகை அவன் தனது இரு கண்களாலும் அள்ளிப் பருகுகின்றான். விழிக்கோணத்தில் அவனது தடந்தோள்களையும், அகன்ற மார்பினையும், ஒளி பொருந்திய முகத்தினையும் அவள் குனிந்தவாறே எட்டிப் பிடிக்கின்றாள்.

ஒருவரோடொருவர் பேச வேண்டுமென்று பேராவல்தான். இருப்பினும் அறிமுக மில்லாதவருடன் எப்படிப் பேசுவது? பேச வாயெடுத்தாலும் மனம் துணியவில்லையே. நாணம் வந்து குறுக்கிடுகின்றதே.

இவ்வாறு அன்று அவர்கள் பிரிகின்றனர். ஆனால் ஆசை மட்டும் பிரியவில்லை. அது ஒரு புறத்திலும் வளர்ந்தோங்குகின்றது.

அவளை மறக்க முடியாமல் இளைஞன் தன்னை மறந்து விடுகின்றான். தோழர்களோடு இனிதிருக்கும்போதும் அவன் எண்ணம் எங்கேயோ திரிந்துகொண்டிருக்கிறது. அவர்களுடைய வார்த்தையெல்லாம் அவன் செவியில் புகுவதில்லை. அவர்களுடைய கேலிப் பேச்சும் காற்றிலே பறந்து விடுகிறது.

மீண்டும் அவளைக்கண்டு களிக்க முடியுமா என்றேங்கி மறு நாளும் அவன் முன்சென்ற வழியிலேயே செல்லுகிறான். அவளும் அவனை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகத்தான் தோன்றுகிறது. ஆனால் அவனைக் கண்டதும் திடுக்கிட்டுப் பின் வாங்குகிறாள். பாங்கியை எதிர் பார்ப்பதுபோல மறுபுறம் பார்க்கிறாள். பிறகு தலை குனிந்து நிற்கிறாள். உள்ளத்தில் அவள் கொண்டுள்ள ஆவல் மட்டும் நிலம் நோக்கி இருக்கும் நெற்றிப் பிறையிலே சுடர் விடுகின்றது.

முதலில் இளைஞனும் தடுமாறித் தயங்கி நிற்கிறான். தான் அங்குக் காரணமின்றி வந்தது சரியல்ல என்பதுபோன்ற ஒரு உணர்ச்சி அவன் நெஞ்சிலே சிறிது அச்சத்தையும் கலக்கத்தையும் உண்டாக்குகின்றது. அதே சமயத்தில் அவள்பாலுள்ள காதல் அவற்றை உதறித் தள்ளிக்கொண்டு வேறொன்றிலும் எண்ணம் செல்லாதவாறு பெருக்கெடுக்கின்றது.

எப்படியோ அவன் பேச வாயெடுத்து விட்டான். என்ன பேசுவது, எப்படித் துவங்குவது என்ன வார்த்தை சொன்னால் குற்றமாகாது என்றெல்லாம் எண்ண அலைகள் காதற் பெருக்கிலே புரளுகின்றன. ஆர அமரச் சிந்தித்து முடிவு செய்ய நேரமெங்கே? கன்னியின் முன்னால் போய் நின்றும் நில்லாமலும், நின்றால் தவறாக நினைப்பாளோ என்றும், சென்றால் தன் ஆவல் நிறைவேறாதே என்றும் தடுமாறியாகி விட்டது. அந்த நிலையில் வெகு நேரம் யோசிக்கமுடியுமா? ஏதாவது ஒன்றைச் சொல்ல வேண்டியதல்லாமல் வேறென்ன செய்வது?

“அருகிலே தண்ணீர் அகப்படுமா? அதிக தாகமாக இருக்கின்றது” என்றான்.

அவள் என்ன பதில் உரைப்பாள்? காட்டாறு ஒன்று எதிரிலேயே திடுதிடுவென்று இரைந்து ஓடி அந்தக் கேள்வியை அனுவசியமாகச் செய்துகொண்டிருக்கிறது. கலக்க நிலையிலே காளைக்கு அதன் பேரோசை காதில் படவில்லை. தண்ணீர் கேட்பதுதான் ஏற்றதாகஇருக்குமென நினைப்பு வந்தபொழுதே கேட்டு விட்டான்.

வட்டமதி முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டு கன்னி அந்தக் காட்டாற்றுப் பெருக்கையே குறிப்பிட்டுப் பேசலானாள். “அதோ, முன்னாலே ஒரு...” ஆனால் இங்கே பதில் சடக்கென்று முறிந்து விட்டது. எதிரில் உள்ள யாற்றைப் பற்றிப்பேசினால் அவன் உடனே அதை நோக்கிப் போகத்தானே வேண்டும்? மேலும் அங்கு நிற்கவே பேசவோ என்ன முகாந்திரம் இருக்கின்றது? அவன் உடனே சென்று விடுவதில் அவளுக்கும் விருப்பமில்லை போலிருக்கிறது. “தண்ணீர் இங்கேயே இருக்கிறது தருகிறேன்” என்று ஒருவாறு தடுமாற்றத்துடன் மொழியாடிச் சட்டென்று எட்டிச் சென்று பரண்மேல் மட்கலயத்தில் வைத்திருந்த நீரை ஒரு சிறு பொற் சிரகத்தே ஊற்றலானாள். அந்த அன்புச் செய்கை அவனுக்குப் போதும்.

முன்பே குறிப்பிட்டபடி இந்நிகழ்ச்சிகளெல்லாம் எண்ணி எண்ணித் திட்டமிட்டு நடந்தவை அல்ல. முதல் நாளிரவிலும், வரும்போதும் எத்தனையோ திட்டங்களெல்லாம் உள்ளத்தில் எழுந்தெழுந்து மோதியிருக்கும். இருவர் உள்ளங்களையும்பற்றித்தான் பேசுகிறேன். ஆனால் முடிவாக நடைபெற்றது, நடைபெறுவது, என்னவோ, ஏதோ அந்த க்ஷணத்திலே காதல் வெள்ளக் கலக்கத்திலே மேலெழுந்து தோன்றியதுதான்.

திரும்பி வரும்போது காதலன் அன்றைய நிகழ்ச்சிகளை எண்ணி எண்ணி உள்ளத்திலே களிப்படைகிறான். அருகிலேயே ஓடிய ஆற்றொலியைக் கேட்டுக் கொண்டே தண்ணீர் எங்கே கிடைக்குமென்று கேட்டேனே, என்ன முட்டாள்தனம் என்று நினைத்து வெட்கப்படுகிறான், ஆனால், அதைப்பற்றி என்ன? அவள் தப்பாக நினைக்கவில்லையே என்று தன்னையே தேற்றிக் கொள்கிறான். இனிமேல் சந்திப்பதற்கும் அந்தக் கேள்வியல்லவா காரணமாயிற்று என்று அதைப் போற்றுகிறான். வழிநெடுக இதே சிந்தனை. இரவிலும் அதுவேதான்.

(தொடரும்)

காதற்கள்ளன்

புலவர் ஏ. கே. வேலன்

தென்னுட்டு வரலாற்றில் 11ம் நூற்றுண்டு....ஒரு பொன்னேடு!

அந்நாளில் சரித்திரப் புகழ் பெற்றவர்களில் சோழன் இராஜேந்திரன் மறக்க முடியாதவன்.

அவன் சரித்திரப் புகழ்பெற்றவன் என்பதைவிட—தமிழர் சரித்திரத்திற்குப் புகழ் தேடிக் கொடுத்தான் என்பதே பொருந்தும்.

கடலுக்கப்பால் கடாரத்திலும் போர்க் கொடி உயர்த்தினுன்—வடக்கே கங்கைக் கரையிலும் கூடாரம் அடித்திருந்தான்!

வங்கத்து வேந்தர்களான 'கங்க அனங்கபாலர்கள்' அவனிடம் தோற்றுர்கள்...! சோழர் ஆதிக்கத்திற்கு அடி பணிந்தும் வாழ்ந்தார்கள். இராஜேந்திரனின் பிரதிநிதியான சேனுவரையன் என்பவன் அந்நாளில் லாட தேசம் என்று வழங்கிய வங்கத்திற்கு அதிபதியாகச் சென்றிருந்தான். பின்னுளில் அவனுடைய பரம்பரையேதான் மேற்கு லாட தேசத்தையாண்டது என்றும் சரித்திரம் பேசுகிறது.

இந்நிலைமைகளை, நாம் நமது பெருமையாகப் பேசுகிருேம்....! இந்த செய்திகளை உணரும் வங்கத்தார் நெஞ்சம் எவ்வாறு புண்படும் என்பதை நாம் எண்ணிப்பார்ப்பதற்கில்லை. இன்றையவங்கத்தாருக்கும்கூட பழங் கதைகள் மறந்திருக்கும்........ ஆனுல்....அன்று தோற்ற கங்க அனங்கபாலர்களை கொஞ்சம் நினைத்துப் பார்த்தால்...! அவர்களுக்கிருந்திருக்கக் கூடிய வேதனையை, புழுக்கத்தை.......நாம் சித்தரித்துவிட முடியாது.

தோல்வியின் அடிவாரத்தில் உருண்டு கொண்டிருந்த அவர்கள்.... வெற்றிவாகை சூட வழி தேடிக்கொண்டே இருந்தார்கள்! எந்த வகையிலும் படைகொண்டு இராஜேந்திரனை வெல்லவோ, வங்கத்தை சுதந்திரமாக்கவோ முடியாதென்பதைத் தெளிவாகவும் உணர்ந்தார்கள்!

இந்த சூழ் நிலையில்....அனங்கபாலரின் அந்தப் புரத்தில்....... இந்துமதி யென்றவொரு நடனப் பெண்—ஆடற் கலைக்கு அழகு செய்யப் பிறந்தவள்—கொண்டு வந்து சேர்க்கப்பட்டாள். அவள் புகழ் மிக்க சசிரேசா என்ற ஆஸ்தான நாட்டியக் காரியின் மகள்! அழகு மிக்க பொது மகளிர் பருவ மெய்தியதும் முதல் விருந்தாவது மன்னர் குடிப் பிறந்தோர்க்கே என்ற சம்பிரதாயமே அவளை அந்தப்புரத்தில் கொண்டு வந்து சேர்த்தது.

அந்த 'முதலிரவை' மன்னனேடு கழிக்கப் போகிருேம் என்ற மகிழ்ச்சிப் பெருக்கோடு, எதிர்காலத்தைப் பற்றிய இன்பக் கனவுகளுடன் 'இந்துமதியிருந்தாள்!

அவள் அன்னை போதித்தனுப்பிய பாடம்...அரசனிடம் பரிசாகக் கோரவேண்டிய மான்யம் முதலியவையும் அவள் நினைவுக்கிடையிடையே வந்து வந்து போயிற்று. அரசனின் நெஞ்சைக் கவர்ந்து என்றென்றும் அவனுடைய அன்புக்குரியவளாகவேண்டும் என்ற ஆசை கொழுந்து விட்டெரிந்துகொண்டிருந்தது. தன் அழகென்னும் ஆயுதத்தால் அதனை சாதித்துவிடமுடியும் என்ற திடநம்பிக்கையோடு அனங்கபாலன் வருகையை எதிர்பார்த்திருந்தாள்! இரவு மெள்ள நழுவிக்கொண்டேயிருந்தது! நிலவு தன் அமுதக் கிரணங்களால் அவள் பருவத்தின் பதைபதைப்பைத் தூண்டிக் கொண்டிருந்தது ...... அன்றைய மன்மத விழாவுக்காக அலங்கரிக்கப்பட்டிருந்த தலை வாயிலிலேயே நின்று கொண்டிருந்தாள்! உள்ளே அரைச் சுவர்களில் தீட்டப்பட்டிருந்த கேளிக்கைச் சித்திரங்கள் அவளிதயத்தை கிறுகிறுக்க வைத்தன. அவளுக்கென்றே அமைக்கப்பட்டிருந்த தங்கக் கட்டிலும் பட்டு மெத்தையும் — அதிலே பரப்பப்பட்டிருந்த மணங் கமழும் மலர்க் கூட்டமும் அவளை நாண வைத்தன. ஆதலின் அறையின் தலைவாயிலிலேயே நின்ருள். நெடு நேரமாயிற்று... ஊர் உறங்கிற்று. உல்லாச புரியில் காதற்கீதமும் பரதமும், மேள்ங்கட்டும் நேரமும் போயிற்று. அப்போதும் அனங்கபாலன் வந்தானில்லை. அன்றிரவு அவளுக்கு ஏமாற்றமா? அரசனுக்கு அவள் நினைவு தானில்லையா? மறுநாள் மற்றைய தோழிகள் "ஏமாந்தாள்" என்று ஏசிக் காட்டும்போது என் செய்வாள். அவள் அன்னை என்ன பரிசு கிடைத்தது என்று கேட்டால் என்ன சொல்வாள். இந்த மனப்போர் எழுந்து அவள் அமைதியை அழித்துக்கொண்டிருந்தது! அவள் கண்ணிமைகளிலே கணத்துக்கொண்டிருந்த உறக்கம் பறந்து விட்டது! அவள் முகத்திலே சிந்தனு ரேகை படர்ந்தது! அதற்குப் பின்தான் வந்து சேர்ந்தான் அனங்கபாலன்! அவனிடத்திலே ஒரு இளமங்கையுடன் முதலிரவைக் கழிக்கப் போகிருேமென்ற குதூகலம் இல்லை. காதற் துடிப்போ—காமக்கொதிப்போ அற்றவனுக சடங்கை நிறைவேற்றும் சடமாக வந்தான். அந்நிலையிலே அவனைக்கண்ட இந்துமதிக்கு இதயம் துணுக்குற்றது. அதுபோல் ஆடவருடன் உறவுகொள்ளும் நிலைமை அவளுக்குப் புதியது ஆயினும் மீன்குஞ்சுக்கு நீச்சல் பிறர் சொல்லிக் கொடுக்க வேண்டாதது! ஆதலின் புரிந்து கொண்டாள். ஒரு வேளை அரசனுக்குத்தான் தன் மேல் விருப்பில்லையோ என்ற பயம் தட்டிற்று. ஆயினும் வந்துவிட்டான் ஆதலின் அப்படியும் நினைப்பதற்கில்லை.

அரசன் அவளை அழைப்பான் அருகே நெருங்குவான். அவன் பேசாத பேச்சுக்களை அவள் கண்கள் பேசும், அவனுடைய அகன்ற மார்பகம் அள்ளி அணைத்துக்கொள்ளும் ....இன்னும் என்னென்னவோ 'நடந்திருக்கவேண்டும் ... ஆனுல்...... எதுவும் நடைபெறவில்லை. ஒரு கன்னி கழியாத புதுப் பருவ மங்கையாக விடப்பட்டிருந்தாள். கன்னித் தன்மையை அழிப்பதற்கென்ற செய்த ஏற்பாட்டுக்கு இடையில்!



வேந்தன் 'உனக்கென்ன வேண்டும்? கேள் பெண்ணே" என்ருன்.

இந்துமதி மெல்லிய குரலில் தழுதழுக்கத் "தங்கள் இதயம் வேண்டும்" என்று கேட்டபடி தலை குனிந்து நின்ருள்.

அவளுடைய வேண்டுகோளைக் கேட்ட வேந்தன் சிரித்தான். அதிலே குளிர்ச்சி இல்லை. வரட்சிதானிருந்தது. அவள் முகத்திலே மரணக்களைதான் குடிகொண்டிருந்தது! ஒரு முறை கனைத்து, குரலை சரிசெய்துகொண்டு அனங்கபாலன் பேசினுன்! "இந்துமதி! என்னைப் பார்...நீ கேட்கின்ற இதயம் புண்ணுகி—சீழ் கட்டி—ரத்தம் கசிந்துகொண்டே இருக்கிறது. அந்த ஆருத ரணத்தை ஆற்றுவாரில்லை. அங்கே உனக்கெப்படி இடம் கிடைக்கமுடியும். நீயோ வாழவேண்டியவள் — வாழ்க்கையைத் துய்க்க வேண்டிய புதுப் பருவமங்கை! ஏதோ செல்லரித்துப்போன பழைய சம்பிரதாயம் உன் அழகையும், இளமையையும் எனக்குப் பலியாக்கத் துணிந்திருக்கிறது. அதனை ஏற்றுக் கொள்ளக்கூடிய பசி என்னிடத்திலே இல்லை. ஆதலின் என்னை மன்னித்துவிடு. ஆயினும் உனக்குச் சேரவேண்டிய சன்மானம்—மான்யம் ஆகியவைகளைப் பெற்றுக்கொள்" என்று சொல்லிவிட்டு வானத்தை அண்ணுந்து பார்த்தான். இரவின் பெரும் பகுதி கழிந்திருந்தது.

இந்துமதிக்கு-இன்னது சொல்வது செய்வதென்று ஏதும் புரியவில்லை. அந்த இக்கட்டான நேரத்தில் யோசனை கேட்கவோ சொல்லவோ யாரும் இருக்க முடியாத இடம் அது? ஆயினும் ஒருவாறு தன்னை சமாளித்துக் கொண்டு "வேந்தே! தங்கள் மனக்குறை இன்னதென்று தெரிவித்தால்........!" என்று இழுத்தாள்.

"அபலைப் பெண்ணே! உனக்கு வேண்டாத கேள்வி. உனக்கு வேண்டிய எதையும் கேள் தருகிறேன்" என்று தடுத்துச் சொன்னுன்.

"தங்கள் துன்பத்தைத் தீர்க்கும் வாய்ப்பை எனக்கு நீங்கள் தந்தேயாகவேண்டும்" என் அவன் தாள்களில் விழுந்து பற்றிக்கொண்டாள். அனங்கபாலன் அவள் நிலைகண்டு விலாநோகச் சிரித்தான். "வீராதி வீரர்களால் சாதிக்கமுடியாதது. பல லட்சம் வீரர்களைப் பணயம் வைத்துத் தோற்றது பெண்ணே! வாளும் வேலும் கூர்மழுங்கிவிட்டன. நீ என்ன செய்ய முடியும்?" என்று கேட்டு அலட்சியத்தோடு அவளைப்பார்த்தான். "ஆவதும் பெண்ணுலே, என்ற உலக வழக்கை அரசருக்கு நினைவு படுத்துகிறேன். புயலும், பூகம்பமும் அழிக்க முடியாததைக்கூடப் பெண்களின் புன்னகை பொசுக்கி யிருக்கிறதென்ற வரலாறுகள் நீங்கள் அறியாததல்ல; சொல்லுங்கள்" என மேலும் வற்புறுத்திக் கேட்டாள்.

"கங்கை—காவேரிக்கு அடிமையாகிவிட்டது. வங்கத்து சுதந்திரம் சோழனின் காலடியில் துவைக்கப்படுகிறது. அந்த வேதனையைத்தான் இதுவரை சொல்லக் கூசினேன்" என்று சோகித்தான்.

அதைக் கேட்டதும் புள்ளி மான் போல் துள்ளி எழுந்தாள்! "மன்னு! இதோ வங்கத்தின் மானத்தை மீட்கப் போகிறேன். விடை கொடுங்கள்" என்று துடிப்போடு கேட்டாள்.

புலிவேட்டைக்குப் புள்ளிமான் புறப்பட்டால் யார் நகைக்கமாட்டார்கள்! அனங்கபாலனும் நகைத்தான்....! அந்தச் சிரிப்பு அவளிதயத்தை வாள் கொண்டறுப்பது போலிருந்தது. அங்கிருந்து அந்தச் சிட்டு பறந்தது. அனங்கபாலன் அவள் சென்ற திசை நோக்கி நின்ருன். கதிரவன் வழக்கம்போல் தன் கடமையைச் செய்யப் புறப்பட்டுவிட்டான்!

அது முதல் நாட்கள் வாரங்கள் மாதங்கள் சில கடந்தன. அந்த சம்பவம் அனங்கபாலனுக்கு மறந்தே போயிற்று.

அந்நிலையில் இந்துமதி கங்கை கொண்ட சோழபுரம் வந்து சேர்ந்தாள். அங்கேயே நல்ல விடுதியொன்றைத் தேடிக் கொண்டு தங்கிவிட்டாள்.

(அடுத்த இதழில் முடியும்.)

திருத்தம்

இந்த இதழில் எட்டாம் பக்கத்தில், நான்காவது உபதலைப்பில், வீடறு என்றிருப்பதை, வீடணு என்று திருத்தி வாசிக்கவும். வீடணன்—விபீடணன். —ஆ-ர்.]

கே. பி. வத்சல்,
சிந்தாதிரிப் பேட்டை.

'சுகம் எங்கே' படத்திற்கு வசனம் எழுதியது யார்?

தோழர் ஏ. கே. வேலன் அவர்கள். கண்ணதாசன் சில பகுதிகள் எழுதிக் கொடுத்தார்; அவ்வளவுதான்.

* * *

காமராசரை எதிர்த்துப் போராட வேண்டிய நிர்ப்பந்தம் வந்தால் அண்ணாத்துரை போராடுவாரா?

கண்டிப்பாக! அவருக்கும் அண்ணாவுக்கும் உள்ள உறவு, 'திராவிடர்கள்' என்கிற அளவில்தான். நமது கொள்கையை மறுப்பவர்கள் யாராயிருந்தாலென்ன; எதிர்த்து நிற்பதே அண்ணாவின் வழி.

* * *

பெரியார் தி. மு. க. வை, அளவுக்கு மீறித் தாக்குகிறாரே!

தாக்கட்டுமே! தாங்குவோம்! தாங்கும் சக்தியை நமக்குத் தந்தவர் அவர்தானே! இப்போது சோதிக்கிறார், கட்டை உறுதியாக இருக்கிறதா என்று!

வி. நரசிங்கன், பூங்குடி.

சிவஞானத்தை கமாராசர் மதிக்காமல் நடக்கிறாரே, ஏன்?

திரும்பத் திரும்ப ஒருவரைப் போய்க் கெஞ்சிக் கொண்டிருந்தால், யாரையா மதிப்பார்கள்! கட்டிய மனைவியிடம் கூட விரைப்பாக நின்றால் தான் மதிப்பு உண்டு.

* * *

நீங்கள் கம்யூனிஸ்ட்களை எதிர்க்கிறீர்களா, மாஸ்கோவை எதிர்க்கிறீர்களா?

மாஸ்கோவையே எதிர்நோக்கி நிற்கும் கம்யூனிஸ்டுகளை.

பழைய மந்திரிகளெல்லாம் எங்கே போனார்கள்?

இருக்குமிடம் தெரியவில்லை; விலாசம் தேவை!

* * *

ஜீவானந்தம் ஏன் இப்படி மோசமாகப் பேசுகிறார்?

ஆமாம். அதைத்தான் நானும் கேட்கிறேன். கோடை காலம் போய் விட்டதே? ஏன் இன்னும் மோசமாகப் போகிறார்!

* * *

'முரளி' என்றால் என்ன பொருள்?

'தாமரை' என்கிறது, அகராதி.

* * *

கே. நடராசன், கமலபுரி.

'வேலை மெனக்கெட்டு வந்தான்' என்கிறார்களே, இந்த 'வேலை மெனக் கெட்டு'க்கு என்ன பொருள்?

அது வேலை மெனக் கெட்டு' அல்ல; 'வேலை மினுக் கிட்டு!' அதாவது, வீரன் வேலுக்கு 'பாலிஷ்' போடுவது எவ்வளவு அவசியமற்றதோ அவ்வளவு அவசியமற்றது அவன் வரவு என்பதைக் குறிக்கும். வீரர்கள் எப்போதும் பகைவரின் மார்பில் வேலோடு விளையாடுபவர்கள். வேல், மினுக்கி வைக்கப்பட வேண்டியது அல்ல என்பதை இது குறிக்கும். பழைய பாடல்களில் இந்த வார்த்தை வந்திருக்கிறது.

8-ம் பக்கத் தொடர்ச்சி]

வேற்றுமைக் கண்டு வெட்கித் தலை குனிந்து வேதனையால் மனம் நொந்து போனார்களா?

தமிழனே!, நீயேன் இப்படி இழி தன்மைக்கு ஆளானாய்?

அகில இந்திய வெறி கொண்டு இப்படிச் செய்தார்கள் என்று கூறலாம் பலர். குறுகிய நோக்கம் ஏதும் இல்லாது அவர்கள் நடந்து கொள்கிறார்கள் என்றால், அவர்கள் சார்ந்துள்ள பிரஜா கட்சியின் நிலை என்ன?

19 பேரைக் கொண்ட கட்சி மந்திரி சபை அமைத்திருக்கிறது. காங்கிரஸ் தலைவரின் ஒரு கண் ஜாடை போதும்: பட்டம்தாணு பதவியை இழந்து விடுவார். பெருமையும் பூரிப்பும் தரும் செய்தியா இது?

அகில இந்தியாவின் பெயரால் இயங்கும் கட்சிகள் சிலவற்றிக்கு தென்னாட்டிலே அரை குறை தலைவர்களாவது இருக்கிறார்களே!

பிரஜா சோஷலிஸ்டு கட்சியின் தலைவர்கள் அனைவரும் வடக்கே தானே இருக்கிறார்கள்! பி. சோ. இளைஞர்களுக்கு இது புரியவில்லையா?

சிறையிலே வாடுகிறார் லோகியா, இராஜினாமா செய்கிறார். அந்தக் கட்சியின் அஸ்திவாரமே இரண்டு சம்பவங்களில் நொறுங்கிப் போயிற்று.

இந்த மண் குதிரையை நம்பி பட்டம்தாணுவுக்கு வரவேற்பளிக்கிறீர்களே! திண்டுக்கல், பி. சோ. இளைஞர்களே! தமிழர்கள் உள்ள மட்டும் உங்கள் வரவேற்பு நிகழ்ச்சியை எண்ணி வெட்கித் தலை குனியட்டும்!

— **சிவம்**



சிரிப்புத்தான் வருகுதையா!

'கம்பன் ஒரு சமுதாய விஞ்ஞானி' என்பதாக, கம்யூனிஸ்ட் தோழர் ஜீவானந்தம் குறிப்பிட்டராம். நமது கம்யூனிஸ்ட் நண்பர்களின் வார்த்தைகளே வேடிக்கையாக இருக்கும். அந்த ரகத்தில் இதுவும் ஒன்று. கம்பன் 'சமுதாய விஞ்ஞானி' என்பதற்கு ஜீவானந்தம் கூறும் காரணங்கள் ஒரு பக்கம் இருக்கட்டும். கம்பன் ஒரு விஞ்ஞானியா? அதுவும் சமுதாய விஞ்ஞானியா, வேறு ஏதாவது விஞ்ஞானியா என்கிற 'ஆராய்ச்சி'யில் நாம் இறங்குவோம்.

விஞ்ஞானி என்பவன் யார்?

மறைந்து கிடக்கும் பொருள்களை வெளியில் கொண்டுவந்து உருச்சமைப்பவன்.

அப்படிப் பார்த்தால்...கம்பன் ஒரு விஞ்ஞானிதான். சில பொருள்கள் மறைந்து கிடக்க வேண்டும் என்றுதான் ஆண்களும் பெண்களும் ஆடை அணிகிறார்கள். கம்பனாகிய விஞ்ஞானி இது பற்றிய ஆராய்ச்சியில் இறங்கினான். அன்னை சீதாதேவியின் 'மறைந்து கிடந்த' பகுதிகளை யெல்லாம், ஆடையைக்கிழித்து, அக்கு அக்காகப் பிரித்து வெளியில் கொண்டு வந்து பூதக் கண்ணாடி வைத்துக் காட்டினான். ஆகா! உண்மையிலேயே கம்பன் ஒரு விஞ்ஞானி தான்! ஆனால் ஒரு திருத்தம், அவனை சமுதாய விஞ்ஞானி என்பதைக் காட்டிலும் 'உடலாயும் விஞ்ஞானி' என அழைத்தால் பொருத்தமாக இருக்கும். முந்திய வார்த்தையின் ஓசை நயமும் கெடாது.

* * *

சரி, அதை விட்டு விட்டு அடுத்த கட்டத்துக்குப்போவோம் நமது கம்யூனிஸ்ட் நண்பர்கள் ஏன், இப்பொழுது திடீரென்று கம்ப ராமாயண பக்தி பஜனையில் இறங்கியிருக்கிறார்கள்? அதில்தான் பெரிய 'மிஸ்ட்ரி' புதைந்திருக்கிறது. கம்யூனிஸ்ட் நண்பர்களின் திட்டமென்ன? ஆள் சேர்ப்பது! அதனால் கொள்கை பாதிக்கப்பட்டாலும் கவலையில்லை. பிறகு, கம்யூனிஸ்ட் ஆட்சி வந்ததும், சட்டம் போட்டுத் திருத்திக் கொள்ளலாம்! அதன்படி கம்ப ஆதரவாளர்களைக் கவர்ந்துவிட இந்தப் புன்னகை புரிகிறார்கள். அதாவது, காலேஜில் படிக்கும் மாணவி, தான் விரும்பியவனைக் கவர்வதற்கு எந்தப் புன்னகை அழகாயிருக்கும் என்று கண்ணாடியில் பார்த்து விட்டு, அதே மாதிரி வகுப்பில் புன்னகை புரிவதில்லையா? அது போல!

* * *

ஒரு விஷயம் கேள்விப்பட்டு நான் பெரிதும் வருந்தினேன். அதாவது 'தமிழரசுக் கழகம்' என்பதாக ஒரு கட்சி இருக்கிறதே—நினைவு படுத்திக் கொள்க—அதன் முதல் தளபதி, திருவாங்கூர் கொச்சி தமிழ்ப் பகுதிக்காகப் போராடச் சென்றாராம். பரிதாபகரமாக, அவர் சென்ற ரயில், போராட்டம் முடிந்த மறு நாள் போய்ச் சேர்ந்திருக்கிறது! மிகவும் வருந்தத்தக்க செய்தி. அந்தத் தளபதி வாடிய முகத்துடன், 'தியாகம்' செய்ய வேண்டிய சந்தர்ப்பம் போய் விட்டதே என்ற கவலையுடனும் திரும்பி விட்டாராம். உண்மையில் அவர் திரும்பியிருக்கக் கூடாது. போராட்டம் முடிந்து விட்டால் என்ன! சும்மா வாச்சுக்கும் போய், எங்கேயாவது ஒரு தெருவில் கொடியைப் பிடித்துக் கொண்டு சத்தம் போட்டிருக்க வேண்டும்! ஒரு இடத்தில்தான் போராட வேண்டும், ஒழுங்காகத்தான் போராடவேண்டும்! என்பதெல்லாம் என்ன விதி! வாயில் வந்தபடி 'கன்னபின்ன' என்று திட்டுகிற தளபதி, அங்கேயும் அந்த வேலையைச் செய்திருக்கலாமே! பட்டம் தாணுவைத் திட்டலாம்; மலையாள மக்களைத் திட்டலாம், போராட்டத்தை நிறுத்தியவர்களைத் திட்டலாம்—திட்டவா முடியாது! ஐயோ பேசாமல் திரும்பிவிட்டாரே!

* * *

"டேய் அண்ணாத்துரை! டேய் ராமசாமி நாயக்கா!" என்று எங்கேயாவது சத்தம் கேட்கிறதா? ஓடிப் போய் பாருங்கள். அது தமிழரசுக் கழகக் கூட்டமாக இருக்கும். இப்படியா திட்டுகிறார்கள்? என்று யாரும் கேட்க மாட்டார்கள். காரணம் வயிறு எரிந்து அவர்கள் திட்டிய திட்டு இன்னும் கடைத் தெருவில் எல்லாம் நாறுகிறது! இப்படி நாமும் திட்டமுடியும். ஆனால் திட்டவில்லை. அவர்களுடைய 'வாழ்வு' நமக்குத் தெரியாதா? ராதா சொன்ன மாதிரி 'ப்ராடு' பசங்கள் என்று சொல்லலாம். தலைவனாவதற்கு ஒரு யோக்யதை வேண்டாமா? என்று கேட்கலாம். கார்ப்பரேஷனில் பள்ளிப் புத்தக அனுமதி வாங்கிக் கொடுப்பதற்காக பதிப்பாளரிடம் பணம் பெறுகிறவர்கள் என்றும் சொல்லலாம். எவ்வளவோ இருக்கிறது! ஆனாலும் நாம் சொல்வதில்லை. ஒரு புன்னகையில் இந்தக் 'குஞ்சு'களை அப்புறம் தள்ளிவிட்டுப் போய்க் கொண்டிருக்கிறோம்!

* * *

ஒரு விஷயம் எல்லோருக்கும் தெரிய வேண்டியது அவசியம். பெங்களூரில் சிலப்பதிகார மகாநாடு என்று ஒன்று நடந்ததல்லவா? அதற்கு சிவஞானத்தை அழைக்கவும் இல்லையாம்; மதிக்கவும் இல்லையாம்! ஷேம், ஷேம்! என்னையா இது! ரொம்ப நாளாக அவர் சிலப்பதிகாரம் தனக்குச் சொந்தம் என்று கூறி வருகிறார். தான் இளங்கோவுக்கே பிறந்தவன் என்கிறார். அவரை அழைக்கவில்லையே, பைத்தியக்காரர்கள். அகோ! தமிழ் மக்களே! ஒரு கைக்குட்டை கொண்டு வாருங்கள். சிவஞானத்தின் உடைந்த மூக்குக்கு ஒத்தடம் கொடுங்கள்!

* * *

இன்னொன்று, வடக்கே இருந்து, மேல் நாட்டிலிருந்து, தி. கொ. விலிருந்தெல்லாம் யார் யாரோ சென்னைக்கு வருகிறார்கள். அவர்கள் காமராசரைப் பார்க்கிறார்கள்; பெரியாரைப் பார்க்கிறார்கள்; அண்ணாவைப் பார்க்கிறார்கள்—சிவஞானத்தைப் பார்க்காமல் போய் விடுகிறார்கள்! எல்லோருக்கும், தான் சமம் என்று அவர் நினைக்கிறார்; ஆனால் ஒரு பயலாவது மதிக்க மாட்டேன் என்கிறான். அட பரிதாபமே! இது பற்றி ஒரு ஒப்பாரி எழுதி சிவஞானம் தெருவெல்லாம் பாடிக் கொண்டு வந்தால் நன்றாக இருக்கும். அவருக்கு எழுதத் தெரியாது; அ... நான் எழுதித் தருகிறேன் 'சாம்பிள்' இப்போது தருகிறேன்:

ஐயோ நான் என்ன செய்வேன்
தமிழ் மகனே
ஆருமற்ற பாவியானேன் தமிழ்
மகனே
குய்யோ முறையோ எனக் கூக்கு
விட்டேன்
குட்டிக்கரணம் போட்டுக் குதி
குதிச்சேன்
வாயை விட்டுக்கத்தினேன்;
மாரடிச்சுச் சுத்தினேன்;
பயல்களெல்லாம் வருகிறார்;
பார்க்கமாட்டேன் என்கிறார்;
உயிரை விடப்போகிறேனே,
ஒரு முழத்துக் கயிற்றிலே!
சிலம்பெடுத்துச் சொன்னவன்,
சிப்பியேந்தித் தின்னவன்
கலைகளெல்லாம் தெரிஞ்சவன்,
கண்ணகியின் பிள்ளை நான்!
என்னை மதிப்பார் இல்லையே,
எழவெடுத்த நாட்டிலே!

(பிறகு 'பல்லவி' ஐயோ நான்...

அண்ணாத்துரை கொம்பனோ?
அறிவுமிக்க தமிழனோ!
என்னைப் பார்த்து வாழ்கிறான்,
இங்கிலீஷும் கற்கிறான்,
கண்ணைப்போல அவனையே
காமராசர் நினைக்கிறார்.
என்னழகைப் பாருங்கள்,
இடையழகைப் பாருங்கள்.
சின்ன விழி பாருங்கள்,
திரண்ட தோள்கள் பாருங்கள்
நாட்டியமும் ஆடுவேன்,
நாக்குத் தொங்கக் கத்துவேன்!
கட்டப் பொம்மத் 'தமிழ'னைக்
காட்டியவன் நானேதான்.
என்னை மதிப்பாரில்லையே,
எழவெடுத்த நாட்டிலே!

(பிறகு பல்லவி)

—வணங்காமு...

துயரம் தீர்ந்தது!

டெலிபோன் மணியடித்தது! சோணாசலம் போனை கையிலெடு... கேட்டார். ஒரு பெண் குரல் கேட்டது.

"ஐந்து குழந்தைகளை வைத்துக்கொண்டு என்னால் அவதிப்பட ... வில்லை. கணவனால் செலவைக் கட்டுப்படுத்த முடியவில்லை. தினசரி வேத... யிருக்கிறது.........." இப்படித் தொடர்ந்து கொண்டே போன பேச்சி... குறுக்கிட்டு...

"அம்மா, நீங்கள் தவறான நம்பரில் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். பதினேழு பதினெட்டு" என்றார் சோணாசலம்.

"பரவாயில்லை. யாரிடமாவது என் மனத்துயரை வெளியிட வே... போல் இருந்தது, வெளியிட்டு விட்டேன். சிரமத்திற்கு மன்னியுங்... என்று டெலிபோனை வைத்தாள் அந்தப் பெண்!

...DASAN, 2, Shanmuga Mudali Street, Madras-14.